# சில தினங்களுக்குள் தமிழ்ப் பட்ட தாரிகளுக்கு நியமனம்!

Registered as a News Paper in Ceylon    விலை சதம் 15

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
கொழும்பு

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 249
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 1 ஷஃபான் 16 ஞாயிற்றுக்கிழமை (18-10-70)

எமது தீபாவளி
மலிவு விற்பனை
15 முதல் 28 வரை
தீபாவளி பண்டிகையை
சிறப்புடன் கொண்டாட
தரமான ஜவுளிகளைத்
தெரிவு செய்ய
ராஜ்கோபால்ஸ்
[பிரபல ஜவுளி மாளிகை]
36/1, பெரியகடை, யாழ்ப்பாணம்.

## குமாரசூரியர் தகவல்

கொழும்பு, சனி

தமிழ் பட்டதாரிகளுக்கு அடுத்த சில தினங்களுக்குள் நியமனம் வழங்கப்பட்டு விடுமென்று தபால் தந்தி அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் இன்று செனட்டில்கூறினார்.

தமிழ்ப் பட்டதாரிகளுக்கு இன்னும் ஏன் நியமனம் வழங்கப்படவில்லை என்று செனட்டர் திருச்செல்வம் பேசுகையில் குறிப்பிட்டது சம்பந்தமாக பதிலளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

செனட்சபை அடுத்த முறை கூடும்போது தமிழ்ப் பட்டதாரிகள் ஆசிரியர்களாக நியமனம் பெற்றுவிடுவார்களெனச் சொன்னார்.

இரண்டாயிரத்து ஐநூறு பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படும் என்ற உறுதிமொழிக்கிணங்க தமிழ்ப் பட்டதாரிகளும் அடுத்த சில தினங்களுக்குள் நியமனம்பெற்றுவிடுவார்களென அமைச்சர் கூறினார்.

புதிய அரசியலமைப்பை தேசியப்பிரச்னையாகக் கருத வேண்டுமென்றும் இந் நாட்டிலுள்ள சகல பிரஜைகளும் புதிய அரசியலமைப்புச் சம்பந்தமாக தங்கள் கருத்துக்களைக் கூற உரிமையுண்டென்றும் திரு குமாரசூரியர். சொன்னார்.

செனட்டர் கே. எம். பி. ராஜரத்தினு பேசுகையில் கூறியதாவது: "காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா, புதிய அரசியல் அமைப்பொன்றை உருவாக்க என்றுமே முனைந்ததில்லை. இப்போதுள்ள அரசியலமைப்பை மாற்றுவதையே தனது கொள்கையாகக் கொண்டிருந்தார். அவர் மரணமான சமயத்திற்கூட அந்த வேலையைத் தான் செய்துகொண்டிருந்தார். லங்கா சமசமாஜக் கட்சியே புதிய அரசியல் அமைப்பை ஏற்படுத்தப் பின்னுக்கு நின்று வேலை செய்கிறது.

செனட் சபையில் தங்களுக்குச் சாதகமான ஒரு சட்டம் நிறைவேறவில்லை என்பதற்காகச் செனட்டை ஒழிக்கச் சட்டமா?

அரசின் போக்குப் பிடிக்காமல், அரசை எதிர்க்கும் இளைஞர்கள் எல்லோரும் 'சேகுவேரா'வா? 'சேகுவேரா' என்று கூறி இளைஞர்களைக் கைதுசெய்யும் அரசாங்கத்தின் நடவடிக்கை சர்வாதிகாரமானது.

# உயர்கல்விச் சட்டம் ஒழிக்கப்படும்!

# 3 பல்கலைக்கழகங்கள்

## வடக்கு, கிழக்கு, தெற்கில்!!

## மந்திரிசபை முடிவு

- மு. சின்னத்துரை -

கொழும்பு, சனி

உயர் கல்விச் சட்டம் ஒழிக்கப்படவிருக்கிறது. கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் சமர்ப்பித்த இதற்கான நகல் மசோதாவை இன்று மந்திரிசபை ஏற்றுக்கொண்டது.

வடக்கு, கிழக்கு, தெற்கு ஆகிய மூன்று மாகாணங்களிலும் தனித்தனிப் பல்கலைக்கழகம் நிறுவுவதென்றும் மந்திரிசபை முடிவு செய்துள்ளது.

உயர் கல்விச் சபைக்குப் பதிலாகப் பல்கலைக்கழக ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும். இந்தக் குழுவில் மாணவர்களும் அங்கம் வகிப்பர். தங்குமிடம், கல்வி வசதி போன்றவற்றை ஆணைக்குழு செய்துகொடுக்கும்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சமர்ப்பித்திருந்த ஒருலட்சம்பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தை மந்திரிசபை ஏற்றுக்கொண்டது.

கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைப்பு செய்யப்படுவதற்கான வர்த்தக அமைச்சர் திரு ரி. பி. இலங்கரத்தினுவின் திட்டத்தை மந்திரிசபை ஏற்றுக் கொண்டது, தகுந்த சம்பளம் இடமாற்றம் தொழில் பாதுகாப்பு போன்றவை கூட்டுறவுச்சங்க புனரமைப்பில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்கள்

## தொழிற்சங்கம் அமைக்க நடவடிக்கை

பருத்தித்துறை, சனி

நாட்டிலுள்ள மொத்தம் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஆசிரியர்களில் விஞ்ஞானப் பட்டதாரிகள் தொகை ஆக 750 தானும் இவர்கள் 150 பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்றார்களாம். விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியர்களால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரமொன்றில் இந்தப் புள்ளி விபரம் தரப்பட்டுள்ளது. இந்த விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள் வேலைப்பழுவால் அவதிப்படுவதாயும் இவர்களது சம்பளமும் போதாதென்றும் கூறும் பிரஸ்தாப துண்டுப் பிரசுரம் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்கள் தொழிற் சங்கமொன்று அமைத்து இயங்கவேண்டிய தன் அவசியத்தையும் வற்புறுத்துகிறது.

'1,20,000 ஆசிரியர்கள் மத்தியில் 750 விஞ்ஞான ...டியுள்ளது. இந் நிலையில் எமக்கென ஒரு தொழிற்சங்கம் இருந்தால் மட்டுமே நாம் எமது கோரிக்கைகளை முன்வைத்துப் போராட முடியும்.'

அமைப்பாளர் குழுவென ஏழு பேர் கைச்சாத்திட்டு இப்பகுதிப் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. உதயமாக இருக்கும் இத் தொழிற்சங்கம் அரசியற்கலப்பற்றதாக இயங்குமென்றும், விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களின் தனிக்குரலாக இந் நிறுவனம் விளங்குமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மிக விரைவில் இச்சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற விருப்பதாகத் தெரிகிறது.

## தமிழக முதல்வருக்கு சர்வதேச விருது!

அமெரிக்காவிலிருந்து வந்த ... நேற்று வழங்கினர்

சென்னை, அக். 17 ...ருக்கு திரு மில்லர் இவ்...

'தமிழக...

பள்ளி சென்ற

## சிறுவனைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்றுக் காலையில் பாடசாலைக்கு சென்ற ஆறுவயதுச் சிறுவன் ஒருவன் இதுவரை வீடு திரும்பவில்லை

## 'முஸ்லிம்களுக்கு ஏன் நியமன எம். பி.?'

திரு. கே. எம். பி. ராஜரத்தினு தொடர்ந்து பேசுகையில் முஸ்லிம்களுக்கு ஏன் நியமன எம்.பி. பதவி வழங்கப்பட்டிருக்கிறது என்று கேட்டார்.

"முஸ்லிம் எம். பி.க்கள் ஆட்சிமன்றத்திற்குத்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்; அதுடன் பெரும்பான்மையாக சிங்கள மக்கள் வாழும் வேருவளைத் தொகுதியிற்கூட ஒரு முஸ்லிம் எம். பி. யாகத் தெரிவுசெய்யப்பட... ளது?" என்று திரு. கே. எம். பி. கேட்டார்.

திரு. எம். சி. சுப்பிரமணியத்திற்கு நியமன எம். பி. பதவி வழங்கப்பட்டதில் அர்த்தம் இருக்கிறதென்று கூறிய அவர். "செனட் ஒழிக்கப்பட்டு. பாராளுமன்றத்தில் நியமன எம். பி.க்கள் கூடுதலாகத் தெரிவு செய்யப்பட்டால், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்களைவிடக் கூடுதலான நியமன எம். பி.க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற் சங்கமொன்று அமைத்து இயங்கவேண்டிய தன் அவசியத்தையும் வற்புறுத்துகிறது.

'1,20,000 ஆசிரியர்கள் மத்தியில் 750 விஞ்ஞான பட்டதாரிகள் மட்டுமே சுமார் 150 பாடசாலைகளில் கடமையாற்றி வருகின்றனர். உயர்தர வகுப்புகளிலேயே பெருமளவு கடமையாற்றும் அவர்களது வேலைச்சுமையை அவர்களால் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும். பிறநாடுகளில் உள்ள விஞ்ஞான பட்டதாரிகளுடைய சம்பளத்துடன் எமது சம்பளத்தை ஒப்பிடும்போது நாம் வெட்கமும் துக்கமுமடையவேண்

விரைவில் இச்சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற விருப்பதாகத் தெரிகிறது.

## 'சமூக குறைபாடுகள்'

கொழும்பு, சனி

காவலூர் இராசதுரை எழுதிய 'சமூகக் குறைபாடுகள்' என்ற சித்திரம் நாளை இரவு 7-15 மணியிலிருந்து 7-45 மணிவரை ஒலிபரப்பப்படவுள்ளது. சில்லையூர் செல்வராசன் ராஜேஸ்வரி சண்முகம் விமல் சொக்கநாதன் எம். சரோஜா எப். ஏ. குணசீலநாதன் மாதுரி தேவி கணேசதுரை ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றுகின்றனர்

கப்படும். இந்தக் குழுவில் மாணவர்களும் அங்கம் வகிப்பர் தங்குமிடம், கல்வி வசதி போன்றவற்றை ஆணைக்குழு செய்துகொடுக்கும்.

ஐக்கிய முன்னணியின் சிம்மாசனப் பிரசங்கத்தில் தெரிவிக்கப்பட்ட வடக்கு கிழக்கு தெற்கு ஆகிய பகுதிகளில் மூன்று பல்கலைக் கழகங்களையும் நிறுவுவதென்றும் மந்திரிசபை முடிவுசெய்துள்ளது.

பிரதமர் திருமதி

## அமெரிக்காவிலிருந்து வந்த மில்லர் நேற்று வழங்கினார்

சென்னை, அக். 17

உலகக் கவிதைச் சங்கத்தின் விருது இன்று தமிழக முதல்வர் திரு மு. கருணாநிதிக்கு வழங்கப்பட்டது. கவிதை இலக்கியத்துக்கு அவர் ஆற்றிய சேவையைக் கௌரவித்து உலகக் கவிதைச் சங்கத்தினர் இவ்விருதை வழங்கியுள்ளனர்.

இந்தச் சங்கத்தின் தலைவர் திரு மில்லர் அமெரிக்காவிலிருந்து தமிழகத்துக்கு வந்திருந்தார். தமிழகமுதல்வர் இல்லத்தில் வைத்து அவருக்கு திரு மில்லர் இவ்விருதை வழங்கினார்.

கடைசியாக இவ் விருது பிலிப்பைன்ஸ் அதிபர் திரு மார்கோஸுக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

உலகக் கவிதைச் சங்கத்தில் திரு. கருணாநிதியைத் தீவிர உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ள முடிவு செய்திருப்பதாகவும் செய்தியொன்று தெரிவிக்கிறது.

கவிதை இலக்கியத்திற்கு திரு. கருணாநிதி ஆற்றிய சேவையை திரு. மில்லர் வெகுவாகப் புகழ்ந்தார்.

தாம் எழுதிய சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகியவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்புகளை திரு. மில்லரிடம் தமிழக முதல்வர் அன்பளித்தார். தி மு க வின் தோற்றம், வளர்ச்சி பற்றிய ஆங்கில நூல் ஒன்றையும் திரு.கருணாநிதி வழங்கினார்.

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்றுக் காலையில் பாடசாலைக்கு சென்ற ஆறுவயது சிறுவன் ஒருவன் இதுவரை வீடு திரும்பவில்லையென பொலிசில் பெற்றோர் புகார் செய்துள்ளனர்.

நல்லூர் பிள்ளையார் வீதியைச் சேர்ந்த வன்னியசிங்கத்தின் மகனான விஜயசிங்கம் யாழ்ப்பாணம் செங்குந்தா இந்துக் கல்லூரியில் முதலாம் வகுப்பில் கல்வி பயில்பவன். இவனது ஒவ்வொரு கைகளிலும் ஒவ்வொரு கால்களிலும் ஆறு விரல்கள் உண்டென்றும் முன்வாயின் மேற்பற்கள் இல்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. காலையில் பாடசாலையில் சிறுவன் காணப்பட்டானென்றும் மதியவேளை வீட்டுக்கு வரும் வழமையான பாதையைவிடுத்து வேறுபாதையால் திரும்பினான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்யப்பட்டுள்ளனர்; அத்துடன் பெரும்பான்மையாக சிங்கள மக்கள் வாழும் பேருவளைத் தொகுதியிற் கூட ஒரு முஸ்லிம் எம். பி. யாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அப்படியிருக்க ஜனாப் பதியுதீன் மஹ்முத்துக்கு ஏன் நியமன எம்.பி பதவி வழங்கப்பட்டுள்

றத்தில் நியமன எம். பி.க்கள் கூடுதலாகத் தெரிவு செய்யப்பட்டால், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்களைவிடக் கூடுதலான நியமன எம். பி.க்களே மந்திரிகளாக இருப்பர். ஜனநாயகத்துக்கே இது முறைகேடானதாகும்'' என்று கூறினார்.

## உள்ளூராட்சி ஊழியருக்கு அரசு முழுச் சம்பளம் வழங்கும்

கொழும்பு, சனி

உள்ளூராட்சிமன்ற ஊழியர்களுக்கு முழுச் சம்பளத்தையும் அரசாங்கமே வழங்குவதற்கான நடவடிக்கைகளை உள்ளூராட்சி மந்திரி திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா எடுத்துள்ளார்.

இதுவரைகாலமும் தமது வருமானத்திலிருந்து உள்ளூராட்சி மன்றங்கள் ஊழியர்களுக்கு அவர்களின் சம்பளத்தில் அரைவாசிப் பகுதியை வழங்கி வந்தது.

உள்ளூராட்சி மன்றங்களின் வருமானம் இனி முழுக்க முழுக்க அபிவிருத்தி வேலைகளுக்கே பயன்படுத்தப்பட வேண்டுமென பீலிக்ஸ் திட்டம் கூறுகிறது.

## புதிய சட்டம்

**கொழும்பு, சனி**

**முதலாளிமார்களைக் கட்டுப்படுத்தும் புதிய சட்டம் ஒன்றுவிரைவில் நிறைவேற்றப்படவிருக்கின்றது.**

கட்டாய மத்தியஸ்தத்துக்குப் பிரச்னைகள் விடப்படும்போது ஸ்தாபனங்களை திறந்து தொழில் நடாத்த வேண்டுமென முதலாளிகளை வற்புறுத்தும் நகல் சட்டமொன்றை தொழிலமைச்சர் திரு. சிறிவர்த்தன அடுத்தவாரம் ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இப்போதுள்ள நிலைமையில் தொழிலாளர் பிரச்னைகள் மத்தியஸ்தத்துக்கு விடப்பட்டிருந்தபோதும் தங்கள் ஸ்தாபனங்களைத் திறந்து சில முதலாளிகள் தொழில் நடத்தாது இருப்பது மட்டுமன்றி தொழில் இலாகாவினர் நடத்தும் விசாரணைகளுக்கும் சமுகமளிக்கிறார்களில்லை எனக் கூறப்படுகிறது. இப்பொழுதுள்ள தொழில் தகராறுகள் சட்டத்துக்குக்கொண்டு வரப்படவிருக்கும் புதிய திருத்த சட்டத்தின்மூலம் மேற்படி தவறுகளை செய்யும் முதலாளிகள்மீது கடுந்தண்டனைகள் விதிக்க வழி செய்யப்பட்டிருக்கிறது.

(சி பீ ஏ)

... ...

# மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு

# 'மாவட்ட சபையை ஆதரித்த ரஹீம் முஸ்லீம் மக்களின் துரோகி'

# இன்றைய கல்வி அமைச்சர் கூறியதாக சாட்சியம்

( நமது நிருபர் கா. யோகநாதன் )

யாழ்ப்பாணம், ஞாயிறு

**'நோட்டீசை நான் மனுதாரிடம் காட்டியபோது தேர்தல் முடியட்டும் இதைப் பற்றிக் கவனிப்போம் என மனுதார் கூறினார். மனுதாரின் இளைய சகோதரர் என்னை வரும்படி கூறினார். புறக்டர் வீட்டிற்குப் போனேன். வழக்கு வைக்கவேண்டிவரும் எனப் புறக்டர் சொன்னார். நீர் சாட்சி சொல்லவேண்டுமென்றும் சொன்னார். அதற்குப் பிறகு புறக்டர் ஒன்றும் என்னைக் கேட்கவில்லை'**

மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கில் அட்வகேட் எச். டி. தம்பையா குறுக்கு விசாரணை செய்கையில் எம் ஏ. சுல்தான் மேற்கண்டவாறு கூறினார்

எம். ஏ. சுல்தான் தொடர்ந்து கூறியதாவது:-

புறக்டர்வீட்டில் மனுதார் இருந்தார். நான் அங்கு அலுவலாகப் போனேன். அந்தப் புறக்டரின் பெயர் அபுதாசிர். அவர் ஒரு உறுதி தரவேண்டும். நான் மனுதாருடன் கதைக்கவில்லை. தேர்தல் தினத்தன்று வாக்குகள் எண்ணப்படும்போது நான் போகவில்லை.

புறக்டர் தாசீரிடம் உண்மை சொல்லுவேன் என்று சொன்னேன். பத்திரத்தில் கையெழுத்துப் போட வேண்டும் என்று புறக்டர் சொன்னார். தேவையான போது அறிவிப்பதாகக் கூறினார். பிறகு நான் அதே புறக்டரிடம் போனேன். அவர் பத்திரத்தை வாசித்து விளங்கப்படுத்தினார். நான் சரியென்று வாசித்து ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டேன்.

நீதி: பாடசாலையில் தமிழ் மட்டும்தானா படித்தீர்?- ஆம்

நீதி: ஆங்கிலம் படிக்கவில்லையா?- அந்த நேரம் படிப்பிக்கவில்லை.

வழ: இது உமது கையெழுத்தா?- ஆம்

வழ: ஆங்கிலத்தில்தான் கையெழுத்துப் போட்டீர்?- ஆம்

வழ: நேரத்தைநீர்தானா எழுதினீர்?- ஆம்

வழ:- ஜும்மா தொழுகை தான் மார்க்க வைபவம்?- கதீஸும் மார்க்க வைபவம் தான்

வழ: அழகக்கோனை கண்டது பொய் என்கிறேன்?- உண்மை

வழ: நோட்டீசை அவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஏல விற்பனை

யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளையில் 31-7-1969 வரை அடைவு வைத்து மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும், மேற்படி வங்கிக் கிளையில்வைத்து 9-11-1970 திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

முகாமையாளர்'
யாழ்ப்பாணம் கூட்டுறவு
மாகாணவங்கி
ஊர்காவற்றுறைக் கிளை.

இப்படிக்கு
பொதுமுகாமையாளரின்
8518 உதவியாளர்

## டாக்டர் குலரத்ன மாரடைப்பால் மரணம்

கொழும்பு, சனி

தன் மனைவியைக் கொலை செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டிருந்த காலியைச் சேர்ந்த டாக்டர் எச் டி என் குலரத்ன இன்று மாரடைப்பால் மரணமானார். தமது மனைவி பத்மினி குலரத்னவை கொலைசெய்ததாகவும், கொலைசெய்யசதிசெய்ததாகவும் இவர்மீதும் இவரது தாயார். பணிப்பெண் ஆகியோர்மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. காலி அசைஸ் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் திரு எச் என் ஜி பர்னாண்டோ முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டபோது இம்மூவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இவர்கள் அப்பீல் நீதிமன்றத்துக்கு மனு செய்ததன் மூலம் விடுதலைசெய்யப்பட்டிருந்தனர். (சிபிஏ)

## 'பணத்தைவிட பங்கீட்டு அரிசி புத்தகங்களை கொடுங்கள்'

**— வர்த்தக அமைச்சர்**

கோட்டை, சனி

பொதுமக்கள் 'நாட்டைக் காக்கும் நிதி'க்கு பணத்தைக் கொடுப்பதிலும் பார்க்க, தங்கள் பங்கீட்டரிசிப் புத்தகங்களை அரசாங்கத்துக்குக் கொடுப்பதால் அரசாங்கத்துக்கு பெரும் உதவி செய்தவர்களாவார்கள்.'

பொதுமக்களுக்கு விடுத்த செய்தியொன்றில் மேற்கண்டவாறு உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகஅமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின பொதுமக்களை கோரியுள்ளார்.

அவர் மேலும் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:

'வருடமொன்றிற்கு இரண்டரைக் கோடி ரூபாவுக்கும் மேலான பணம் அரிசி இறக்குமதிக்காகச் செலவிடப்படுகிறது. நாட்டின் இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் இடையில் ஆறேகால் கோடி ரூபா வித்தியாசம் காணப்படுகிறது. இப்புதிய அரசாங்கம் தனது கடமையைப் பொறுப்பேற்கும் போது 156 கோடி ரூபா கடனுடனேயே பொறுப்பேற்றுள்ளது. இந்தக்கடனை அரசாங்கம் படிப்படியாகத் தீர்க்கவேண்டும். இல்லாவிடில் எமது வருங்கால சந்ததியினருக்கு பேராபத்தாகும்.

தற்போது நாம் இறக்குமதி செய்யும் பொருட்களில் அநேகமானவை தவிர்க்கக் கூடியனவாகவுள்ளன. தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் நன்மை பயப்பதாக அமையவேண்டுமானால் கூடியளவுக்கு இறக்குமதிப் பொருட்கள் பாவிப்பதைக் குறைக்கவேண்டும் 2 படி அரிசியையும் பயன்படுத்தாமல் விடுவதாலும் நீங்கள் வருங்காலச் சந்ததியினருக்கு பெரும்சேவை செய்தவர்களாவீர்கள்.

## உலகில் பெரிய விமானம்ஒன்று நாசமாகியது

நியுயோர்க் ஒக் 17

உலகத்தின் மிகப்பெரியதும் அமெரிக்காவுக்குச் சொந்தமானதுமான இராணுவப்போக்குவரத்து விமானம் ஒன்று தரையில் நின்றபோது வெடித்து நாசமாகியது

வெடிப்புக்குரிய காரணம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

## 'புதுமைப் பெண்களாக வாழவேண்டும்!'

நாவலப்பிட்டி, சனி

''பெண்கள் முன்னேற வேண்டும் புதுமைப்பெண்களாக வாழவேண்டும். எந்நேரமும் வீட்டுக்குள் முடங்கிக்கிடக்காமல், பெண் உலகத்தை அறிவொளி பெற நாம் ஒன்று சேர்ந்து உழைக்கவேண்டும்'' என்று நாவலப்பிட்டி ஸாகிரா அரபுப் பாடசாலையில் நடைபெற்ற முஸ்லிம் மகளிர் மன்ற அங்குரார்ப்பண விழாவில் செல்வி சித்தி பரிதா முகமத் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நகரசபைத்தலைவர் ஜனாப் எம். எல்.பதூர்தீன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். இலங்கை நிர்வாகசேவையிலுள்ள செல்வி பீரும்மா சிறப்புச் சொற்பொழிவாற்றினார். பின்வருவோர் மன்றத்தின் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

காப்பாளர்: ஜனாமா தாஹிர் தலைவர்: திருமதி வில்லிராஜரத்தினம், ஆலோசகர்: திருமதி .சோமசுந்தரம், காரியதரிசி: செல்வி சித்தி பரிதா முகமத், உபகாரியதரிசி செல்வி புரோஜா ரஹீம், தனாதிகாரி: திருமதி கத்தப்பா, கணக்காளர்: ஜனாபா ரஹீம், மற்றும் பதினொருபேர்கொண்ட கமிட்டியும் தெரிவுசெய்யப்பட்டது.

**காணி அபிவிருத்தி**

## இலாகாவை மூடத்தீர்மானம்

கோட்டை சனி

இவ்வருடம் டிசம்பர் மாதத்துடன் காணி அபிவிருத்தி இலாகாவை மூடுவதற்கு காணி அமைச்சு தீர்மானித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

பழைய கூப்பன் அடிக்கட்டையும், சத்தியக்கடதாசியும், கடிதமும் இணைத்தபடி கச்சேரிக்கும் சின்னக்கடைக்கும் இடையில் 16-10-70-ம் திகதி மாலை 6-30 மணியளவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் கொடுக்கவும். சன்மானம் வழங்கப்படும். 2345

### விற்பனைக்கு

காணி:

கிளிநொச்சியில், கண்டி ரோட்டுக்கு அண்மையில் வீடு கட்டக்கூடிய 1/4 ஏக்கர் துண்டுகள். அரசாங்க உறுதிக்காணி. காணியின் பெறுமதியை தெரிந்தவுடன் செலுத்தவேண்டும். வீடு கட்டுவதற்கு கடன் வசதி செய்யப்படும். அதை மாதக் கட்டாக கட்டலாம். (With debtrecdemption cover) நெற்காணிகளும் உண்டு. விபரங்கள் முத்திரையிட்ட கவர் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். ஓர்கனைஸர் ஷோசல் இன்வெஸ்ற்மென்ட் றஸ்ற், 15/15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 2343

### தேவை

பெற்றோல் நிலையங்களில் கடமையாற்றுவதற்கு மனேஜர்கள் தேவை. பிணைப் பணம் ரூபா 3000/- நற்சாட்சிப்பத்திரங்களுடன் விளம்பர இல. 2347, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். 2347

### தேவை

தமிழ் — ஆங்கிலம் கொம்போசிங் தெரிந்த இருவர் தேவை. நேரில் வரவும். இலங்கநாயகி அச்சகம், கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 2346

மூன்றுந்தவணை மாணவர் பயிற்சி பெறவும், N.P.T.A. பரீட்சையில் சித்தி பெறவும் ஏற்றவை. வே. க. கந்தசாமி (புதுமைலோலன்) எழுதியவை. ஐந்தாந்தர விஞப்பத்திரங்கள்-கணிதம், தமிழ், இந்துசமயம், ஆங்கிலம், சூழல் ஆகிய எல்லாப் பாடங்களுக்கும் ஆக்கப்பட்டுள்ளன. விலை சதம் 60. கூடுதலாக எடுப்பவர்களுக்குக் கழிவுண்டு. எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். 2339


## புதுவருட உத்தியோகஸ்தர்

தாவடி, சனி

கோண்டாவில் கிழக்கு அரசினர் இராமகிருஷ்ண வித்தியாசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஐ. ஆ. இராமசுவாமி, உபதலைவர்: திரு. பொ. பஞ்சலிங்கம் செயலாளர்: திரு. இ. சுப்பிரமணியம் உபசெயலாளர்: திரு. சி. அப்பையா பொருளாளர்: திரு. க வே. சரவணமுத்து உபபொருளாளர்: திரு. ப. சிவசுப்பிரமணியம்.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

எம்.ஜி.ஆர்—லட்சுமி ஜெயலலிதா — அசோகன் நடித்த

# மாட்டுக்கார வேலன்

REGAL JAFFNA

Daily 4 Shows

SYDNEY POITIER

in

TO SIR, WITH LOVE

ஒவ்வொரு பாடசாலை ஆசிரிய ஆசிரியைகளும் மாணவ மாணவியரும் கட்டாயம் பார்த்து மகிழ வேண்டிய உன்னத சித்திரம். சிறுவர் முதல் முதியோர்வரை ஒவ்வொருவரும் பார்த்து ரசிக்கக்கூடிய குடும்பச் சித்திரம். ஆசிரியர் சகிதம் வரும் 50 மாணவர்கொண்ட குழுக்கள் விசேட கட்டணத்தில் அனுமதிக்கப்படுவர்.



## பூநகரி கிராமச் சபை அறிவித்தல்

பூநகரிக் கிராமச் சபையின் ''எவ்'' பற்றுச்சீட்டுப் புத்தகத்தின் ஆயிரத்து நூறும் (1100) இலக்கப் பற்றுச்சீட்டிதழ் எக்காரணம் கொண்டும் செல்லுபடியாகாது.

வை. வல்லிபுரம்,
அக்கிராசனர்,
கி. ச. பூநகரி,
2518 16-10-70.

## கேள்வி விளம்பரம்

### உரும்பராய் — ஊரெழு பட்டினசபை

கீழ்க்காணும் வீதிகளை கல் ரோட்டாக அமைப்பதற்கு உரும்பராய் — ஊரெழு பட்டினசபையால் கேள்விப் பத்திரங்கள் ஐப்பசி மாதம் 28-ம் திகதி காலை 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ரூபா 5000/-க்கு மேற்பதிவு செய்த ஒப்பந்தகாரர்கட்கு ஐப்பசி 27-ம் திகதி பிற்பகல் 3-00 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு வேலைகட்கும் முறையே கேள்விப்பத்திரப் பணம் ரூபா 10/-ம் கேள்விப் பணம் ரூபா 50/-ம் கட்டியதன் பேரில் பட்டினசபையினுல் கேள்விப்பத்திரம் வழங்கப்படும். பத்திரப் பணம் ரூபா 10/-ம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

1. மானிப்பாய் ரோட், வாலையடியிலிருந்து பலாலி ரோட் (நன்கொடை வேலை)
2. ஊரெழு 1-ம் குறுக்குத் தெரு.
3. கற்பகப்பிள்ளையார் வீதிக் கிளை,
4. வேம்பன் சுடலைத் தெரு.

க. பத்மராசா,
தலைவர்,
பட்டினசபை,
உரும்பராய் ஊரெழு.

பட்டினசபை பணிமனை,
உரும்பராய் — ஊரெழு,
உரும்பராய்,
15-10-70. 2520


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 18—10—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00,

### மன்னர் தேர்தல் ஆட்சேப வழக்கு

# 'பாடசாலையை விட்டு விலகியதும் தேங்காய் வியாபாரம் செய்தேன்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

உசேனியா பள்ளிக்கு கிட்டமே 15-ம் திகதி கிராம சபையிலிருந்து வந்தபோது, தேநீர்க் கடையருகில், அழகக்கோனின் கார் நிறுத்தப்பட்டிருந்தது. அவர் காருக்குள் இருந்தார் வெளியில் இருவர் நின்றனர். தேனீர்கடை முதலாளி கடையில் இருந்தார் வீட்டைபோகுமுன் நான் தேநீர் குடித்தேன். வேறு யாரையும் நான் காணவில்லை.

மன்னர் தேர்தல் ஆட்சேப வழக்கில் குறுக்குவிசாரணையின் போது சாட்சியமளித்த எம். ஏ. சுல்தான் மேற்கண்டவாறு கூறினுர் இவ்வழக்கு மூன்றுவது தினமாக நேற்று யாழ்ப்பாணம் தேர்தல் நீதிமன்றத்தில் நீதியரசர் வின்சன் தாமோதரம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

எதிர்மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் ஏச். டி. தம்பையா குறுக்கு விசாரணை செய்தபோது எம் ஏ. சுல்தான் கூறியதாவது:

கிராமசபைக்கும் பாடசாலைக்குமிடையில் 150 யார் தூரம். இப்ரகாம் என்பவர் கொழும்பில் ஒரு கடையில் வேலைசெய்கிறுர். என்னமாதிரி கடை என்று தெரியாது தாராக்குண்டில் அவருக்கு வீடு உண்டு. அவரின் வீடு என் வீட்டிற்கு கிட்ட இருக்கிறது. அவர் தகப்பன் பள்ளியொன்றில் கதிப்பாக இருக்கிறுர். தகப்பன் தலைமன்ஞரில் பள்ளியில் இருக்கிறுர். குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்கள் தாராக்குண்டில் இருக்கிறுர்கள். ஹபீர் அதிகமாக கொழும்பில் இருப்பவர். அவர் எங்கே இருக்கிறுர் என்று தெரியாது. அவருடைய தகப்பனுர் கப்ப மரைக்கார். அவருக்கு தாராக்குண்டில் வீடு இருக்கிறது. நகைக்கடையும் தென்னம்தோட்டமும் இருக்கிறது.

வழ: முகாபா என்றால் என்ன? [illegible] தாரத்திலிருந்து பள்ளிக்கு வாற்வரை அப [illegible] அழைப்பதுண்டு.

வழ: கதிஸ் முடிந்த பின் தான் நோட்டீஸ் கொடுத்ததை கண்டீர்?-ஆம்.

வழ: நோட்டீசை படித்த பின் மனுதாருக்குக் காட்டினீர்?-ஆம்

வழ: அதுமட்டும் தானு செய்தீர்?- ஆம் வேறு ஒன்றும் செய்யவில்லை.

வழ: தாராக்குண்டுகிராம சபைத் தலைவர் சேகுதாவது?- ஆம்-

வழ: அவர் நீண்டகாலம் அங்கத்தவராக இருந்தார்? 64 முதல்68வரை மெம்பரா என்று தெரியாது.

வழ: நீரும் மெம்பராக இருந்தீர ?- ஆம்

வழ: எந்த ஆண்டில்?- 57-ம் ஆண்டில்

வழ: எவ்வளவு காலம் இருந்தீர்?- 3 மாதம் மெம்பராக இருந்தேன் அந்த நேரம் 57 ஜூலை 24-ம் தேதி தலைவர் தெரிவு நடந்தது. நான் வாக்களித்தேன்.

வழ: சேகுதாவது தலைவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டது தெரியுமா?- சரியாக ஞாபகமில்லை

வழ: அதைப்பற்றி ஏதாவது தெரியுமா? -தெரியாது

வழ: தோட்டவெளியில் நீர் வேலை செய்யும்போதும் தாராக்குண்டில் இருந்தீர்? ஆம்

வழ: சேகுதாவது 23,000 ரூபா கணக்கு காட்டாததற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது தெரியுமா? -ஆம்

வழ: 1964-ல் சூறுவளிக்காற்று வெள்ளம் ஏற்பட்டது தெரியுமா: -ஆம்

வழ: தாராக்குண்டு பள்ளியைத் திருத்துவதற்கு சேகுதாவது பணம் சேர்த்தது தெரியுமா? -தெரியாது

வழ: நியமன திகதிக்கு முன் பிரசவ விடுதிக்காக அடிக்கல் நாட்டு வைபவம் நடந்தது தெரியுமா? -ஆம்

வழ: அதற்காக சேகுதாவுதான் காசு சேர்த்தவர்? -சேகுதாவது கிராமசபைத் தலைவர், அவரையும் இரண்டுமூன்று மெம்பர்[illegible]யும் சேர்த்து ஒரு குழு நியமிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வழ: காசு சேர்ப்பதற்கும் கிராமசபைக்கும் சந்தர்ப்பமில்லை?- கிராமசபையில் பிரசவ விடுதி கட்ட[illegible] ஒரு

46 வயது

வழ: எத்தனைவருடத்திற்கு முன்பாகப் பாடசாலையை விட்டு விலகினீர் என்று சொல்ல முடியாது?- ஆம்

வழ. அப்போது தகப்பனுர் வீட்டில் இருந்தீர்?-ஆம்

வழ' தகப்பன் என்ன தொழில்?- வியாபாரம்

வழ: படிக்கும்போது தகப்பனுர் பராமரிக்கவில்லை?-தகப்பன் இல்லை

வழ: யார் பராமரித்தது?- தாயார்

வழ: உமக்கு எத்தனை சகோதரம்?- 6 சகோதரிகள் உண்டு.

வழ: ஒரே ஒரு ஆண் நீர் மட்டும் தான்?- ஆம்

வழ: சீவியத்திற்கு உழைக்க வேண்டியிருந்தது?- ஆம்

வழ: உமது குடும்பத்திற்கும் உழைக்கவேண்டியிருந்தது?- சகோதரிகள் கலியாணம் முடித்துவிட்டார்கள்.

வழ: பாடசாலையைவிட்டு விலகியதும் என்ன தொழில் பார்த்தீர்?- என்னிடம் வண்டில் இருக்கிறது. தேங்காய் வியாபாரம் செய்தேன்.

வழ: தென்னை, பனையால் உமக்கு மாத வருமானம் 75 ரூபா வருகிறது?-ஆம்

வழ: 30 வருடத்திற்கு முன் குறைவாக இருக்கும்?- கூட இருக்கும், 64 சூறுவளியில் கொஞ்ச தென்னைமரங்கள் விழுந்துவிட்டன.

வழ: ஒன்றரை ஏக்கர் தென்னம் தோட்டத்தால் 1940-ம் ஆண்டு 75 ரூபா விற்குக்கூடிய வருமானம் வந்ததென்று கூறுகிறீர்களா?- ஆம் கூட வருமானம் வந்தது.

### உதை பந்தாட்டம்

# யாழ். இந்துவை மத்திய கல்லூரி தோற்கடித்தது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் தற்போது யாழ் விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், நேற்று முன்தினம் யாழ் மத்திய கல்லூரிக்கும், யாழ். இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் யாழ். மத்திய கல்லூரி வெற்றி பெற்றது.

போட்டி ஆரம்பத்திலேயே, யாழ். மத்திய கல்லூரி முதலாவது கோலைப் போட்டது. இதன் பின் இடைவேளைவரை ஆட்டம் மந்தமாகவே காணப்பட்டது.

இடைவேளையின் பின் யாழ். இந்துக் கல்லூரி ஒரு கோலைப் போட்டது. இதனை ரி. தர்மகுலராசா அடித்தார் இதன் பின் இரு கோஷ்டிகளும் வேகமாக விளையாடிய போதிலும், இருசாராரும் பல இலகுவான கோல்களைப் போடும் கட்டங்களை அடிக்கடி நழுவவிட்டவண்ணமே இருந்தனர், இச்சந்தர்ப்பத்தில், யாழ் மத்திய கல்லூரியின் கோல்காப்பு வீரர் எஸ். ஜெலிங்கம், எதிர்க் கோஷ்டியினரின் பல திடீர் தாக்குதல்களை மிகச் சாதுரியமாகச் சமாளித்தவண்ணம் இருந்தமையாலே யாழ். மத்திய கல்லூரி இப் போட்டியில் வெற்றிபெற [illegible] கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. கிருஷ்ணன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### உடுப்பிட்டி வெற்றி

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் உடுப்பிட்டி 3—0 கோல்களால் வெற்றி பெற்றது.

இப் போட்டிக்கு திரு. சோமஸ்கந்தா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர். (தே. நி)

## நன்கொடை கோரும் தீர்மானம்

அம்பன், சனி

குடத்தனைகரையூர் நெசவுசாலை வீதி, 10-ம் வட்டார அதிகாரி வெட்டை வீதி, பனைநின்றான் காட்டுவீதி, காவுத்தாளையடி, சோதிப்புலவு, செட்டியாவயல் ஆகிய கிணறுகளுக்கும் விளையாட்டு மைதானம், இலவச பால்மா, நூல்நிலையம் ஆகியவற்றிற்கும் 1971-ம் ஆண்டிற்குரிய அரசினர் நன்கொடை கோருவதற்கான தீர்மானம் குடத்தனைக் கிராமசபையில் கிராமசபைத் தலைவர் திரு.

## உத்தியோகத்தர்

கோண்டாவில், சனி

கோண்டாவில் கிழக்கு அரசினர் இராமகிருஷ்ண வித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில்பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- திரு ஐ ஆ இராமசுவாமி. உபதலைவர்- திரு பொ பஞ்சலிங்கம், செயலாளர்- திரு இ சுப்பிரமணியம், உப செயலாளர் திரு அப்பையா தனுதிகாரி திரு க வே சரவணமுத்து, உபதனுதிகாரி- திரு ப சிவசுப்பிரமணியம்.

5 பேர் கொண்ட நிர்வாகசபையொன்றும்தெரிவு செய்யப்பட்டுள்ளது.


கைத்தறி நெசவாளர்களுக்கு

## ஓர் அறிவித்தல்

உங்களிடம் உற்பத்தியாகும் எந்தவிதமான கைத்தறி ஜவுளிகளையும் பெறுமதியான விலைகளுக்கு எம்மிடம் விற்பனை செய்யலாம்.

S. R S.

ஜவுளி மாளிகை

எஸ். ஆர். செல்லத்துரை,


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பாடசாலை ஆசிரிய ஆசிரியைகளும் மாணவ மாணவியரும் கட்டாயம் பார்த்து மகிழ வேண்டிய உன்னத சித்திரம். சிறுவர் முதல் முதியோர்வரை ஒவ்வொருவரும் பார்த்து ரசிக்கக்கூடிய குடும்பச் சித்திரம். ஆசிரியர் சகிதம் வரும் 50 மாணவர்கொண்ட குழுக்கள் விசேட கட்டணத்தில் அனுமதிக்கப்படுவர். தேவைகளுக்கு மனேஜரிடம் தொடர்பு கொள்க.



## யாழ். வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினிகணேசன் — காஞ்சனு

நடித்த

# சாந்தி நிலையம்



7-வது வாரம்

## வெலிங்டன் யாழ்நகர்]

(2-30, 6-30, 9-30) போயாதினங்களில் 4 காட்சிகள்

கிங்ஸ்லி (கொழும்பு)

தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.

உணர்ச்சி ஓவியம் . . .

★ ஏ வி.எம்.ராஜன்

இந்திய ஜனுதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா

காஞ்சனு, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி

நடித்த

ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்

# துலாபாரம்

(தமிழ்)

டைரக்ஷன்: வின்ஸன்ட்

(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)

கெப்பிட்டல் (கொழும்பு)    பிளாஸா (வெள்ளவத்தை)

வெகு விரைவில் வெலிங்டன் யாழ்ப்பாணம்

★ சிவாஜி ★ சௌகார் ஜானகி

சிவகுமார், வாணிஸ்ரீ, பாரதி

மற்றும் பலர் நடித்த

ஏ. வி. எம். புரடக்ஷன்ஸ்

# உயர்ந்த மனிதன்

[1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய பாராட்டைப் பெற்றது]


## ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 18—10—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-15 முத்திநெறி, 6-35 பெண்ணுலகம், 7-00 திரைகலம், 7-15 சித்திரம், 7-45 வாத்திய இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைப் பயிற்சி, 10-30 செய்தித் தொகுப்பு.


## வெஸ்லிசினிமா

மானிப்பாய்

தினசரி 6-30, 9-30

போயா ,பிரீபோயா 2-30

சிவாஜி-சரோஜாதேவி

நடித்த

### பாலும் பழமும்



## ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

போயா நாட்களில்4 காட்சிகள்

சிவாஜி-பானுமதி

நடித்த

### அறிவாளி



## ஸ்ரீகாலிங்கன்

இணுவில்

தினசரி 2-30, 6-30, 9-30

போயா, பிரிபோயா 10-30

சிவாஜி-சௌகார் ஜானகி

நடித்த

### படிக்காத மேதை



MANOHARA

Jaffna

Daily 4-45, 7 &9-45 p.m

Guiliano Gemma

in

FORT YUMA GOLD

(Scope-color)


...கு தாராக்குண்டில் வீடு இருக்கிறது. நகைக்கடையும் தென்னந்தோட்டமும் இருக்கிறது.

வழ: முசாபா என்ருல் என்ன? தூரத்திலிருந்து பள்ளிக்கு வாறவரை அப் ... அழைப்பதுண்டு.

வழ: முசாபா தொழுகை முடிந்தபின் தனக்கு உதவி கேட்பார்?-ஆம்.

வழ: மே 15-ம் தேதி ஜும்மா தொழுகை துவ எல்லாம்முடிந்தபின் ஒருவர் எழுந்து உதவி கேட்டாரா? அன்று கேட்கவில்லை.

வழ: தொழுகை நடந்தபின் அப்படி நடந்தது என்றேன்? நான் காணவில்லை.

வழ: அன்று ஒருவர் தன் இரு பிள்ளைகளின் வைபவத்திற்கு உதவி கேட்டார்? இல்லை.

வழ: கார் நின்ற இடத்திலிருந்து உசேனியா பள்ளி தெரியும்? தெரியாது.

வழ: கடைக்கு எதிர்ப்பகத்தில் உசேனியா பள்ளி இருப்பதாகக் கூறினீரா?- இல்லை ஒரேபக்கத்தில் இருக்கிறது.

வழ: தேநீர்க் கடையிலிருந்து பள்ளியைப் பார்க்க முடியுமா? கடையிலிருந்து பார்க்கமுடியாது. றோட்டிலிருந்து பார்க்கலாம்

வழ: நீர் அழகக்கோனிடம் வந்து எங்கே வந்தீர்கள் என்று கேட்டீர்?-ஆம்.

வழ: பள்ளியில் ஆட்களைச் சந்திக்க வந்ததாகச் சொன்னர்? - ஆம்.

வழ: கதிஸ்நடந்துகொண்டிருந்தபோது அழகக்கோன் வந்தார்?. ஆம்.

வழ: பின் மரத்திற்கு கீழ் போய் நின்ருர்?- ஆம்

வழ: அவர் மரத்தடிக்கு சென்றதைப் பார்த்துக் கொண்டிருந்தீரா?- ஆம் அதன்பின் கதிஸ் நடந்தது.

வழ: அப்பொழுது நோட்டீஸ் கொடுத்ததைக் கண்டீரா?- அந்தநேரம் காணவில்லை.

...ண்டுமூன்று மெம்பர்...யும் சேர்த்து ஒரு குழு நியமிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வழ: காசு சேர்ப்பதற்கும் கிராமசபைக்கும் சந்தர்ப்பமில்லை?- கிராமசபையில் பிரசவ விடுதி கட்ட... ஒரு தீர்மானம் நிறைவேறியது!

வழ: இதுவரை அங்கு வேலை நடந்ததா?-இல்லை.

வழ: அத்திவாரக்கல்லுத் தான் இருக்கிறது?-ஆம்

இக்கட்டத்தில் அட்வகேட் எம். திருச்செல்வம் குறுக்கு விசாரணையை ஆரம்பித்தார்.

வழ: எத்தனை வருடத்திற்கு முன் பாடசாலையை விட்டீர்?- ஞாபகமில்லை.

வழ: எத்தனை வயது?

யாழ் மத்திய கல்லூரியின் கோல்காப்பு வீரர் எஸ். ஜெலிங்கம், எதிர்க் கோஷ்டியினரின் பல திடீர் தாக்குதல்களை மிகச் சாதுரியமாகச் சமாளித்தவண்ணம் இருந்தமையாலே யாழ். மத்திய கல்லூரி இப்போட்டியில் வெற்றிபெற ஏதுவாக இருந்தது. ஆட்டம் முடிவதற்குச் சில நிமிடங்கள் இருக்கும்போது யாழ். மத்திய கல்லூரியின் மத்திய முன்னணி வீரர் ஏ. கனகநாயகம் மின்னல் வேகத்தில் இரண்டாவது கோலைப் போட்டார். இந்தப் போட்டியில், இவ்வீரரின் ஆட்டமே சிறப்புற்று விளங்கியது.

ஆட்ட முடிவில் யாழ். மத்திய கல்லூரி 2—1

...ஆகிய ...றுக்கும் விளையாட்டு மைதானம், இலவச பால்மா, நூல்நிலையம் ஆகியவற்றிற்கும் 1971-ம் ஆண்டிற்குரிய அரசினர் நன்கொடை கோருவதற்கான தீர்மானம் குடத்தனைக் கிராமசபையில் கிராமசபைத் தலைவர் திரு. வ. துரையப்பா தலைமையில் நடந்த மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## சென்.ஜோன்ஸ்-மகாஜனு சுவைமிக்க ஆட்டம்

மாவிட்டபுரம், சனி

சென். ஜோன்ஸ் கல்லூரியும், தெல்லிப்பழை மகாஜனுக் கல்லூரியும் சிநேகபூர்வமாக மோதிய உதைபந்தாட்டப் போட்டியில் 2-ம் பிரிவில் மகாஜனு வெற்றி பெற்றது.

இப் போட்டி ஆரம்ப முதல் இறுதிவரை மிகவிறுவிறுப்பாகக் காணப்பட்டது இடைவேளைவரை இரு தரப்பினரும் கோல் போடாத போதும், இடைவேளையின் பின் போட்டி முடிவடையும் கட்டத்தில் மகாஜனு வீரர் எஸ். சிவானந்தராசா ஒரு கோலைச் சாதுரியமாகப் போட்டு மகாஜனுவுக்கு வெற்றி தேடிக் கொடுத்தார்.

மேற்படி கல்லூரிகளின் 3-ம் பிரிவுக் கோஷ்டிகள் மோதியபோட்டியில் சென். ஜோன்ஸ் மிகவும் சிறப்பாக ஆடியதால் மகாஜனு வீரர்கள் கோல் போடமுடியாத நிலை ஏற்பட்டது இடைவேளையின் முன் சென். ஜோன்ஸ் வீரர்களான டபிள்யூ. சின்னையா, டீ அலெக்சாந்தர், ஏ. ரவீந்திரன் ஆகியோர் அடுத்தடுத்து மூன்று கோல்களை விளாசினுர்கள், இடைவேளையின் பின் மகாஜனு வீரர் வி செல்வரத்தினம் ஒரு கோலை போட்டார். இறுதியில் சென். ஜோன்ஸ் 3—1 கோலால் வென்றது.

போட்டிகளுக்கு எஸ். விநாயகமூர்த்தி மத்தியஸ்தம் வகித்தார்.

மேற்படி கல்லூரி 1-ம் பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற போட்டியில் இரு கல்லூரியினரும் திறமையாக ஆடியதால் இரு கோஷ்டியினராலும் கோல் எதுவும் போடமுடியவில்லை ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டிக்கு திரு. எஸ் தர்மசிறீ மத்தியஸ்தம் வகித்தார்.

......


## தீபாவளி மலிவு விற்பனையை

முன்னிட்டு

புதிதாக வரவழைக்கப்பட்ட

மூசிக்கல் (Mucical) ரெற்றன் சேட்டிங்ஸ்

அநேக நிறங்களில்

இன்றே விஜயம் செய்யுங்கள்

# டயரும்ஸ்

54, 60, மெயின்வீதி    யாழ்ப்பாணம்.



...யும் பெறுமதியான விலைகளுக்கும் எம்மிடம் விற்பனை செய்யலாம்.

## S. R S.

## ஜவுளி மாளிகை

எஸ்.ஆர். செல்லத்துரை,

216, கே கே எஸ். றேட்,

யாழ்ப்பாணம்.

போன்: 296



மொடேர்ன்

# தீபாவளி வாழ்த்து !

கண்கவர் வண்ணச் சித்திரங்கள் அடங்கிய தீபாவளி வாழ்த்து மடல்கள் எம்மிடமுண்டு. நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தீபாவளி வாழ்த்து மடல்களிலும் பரிசுக் கூப்பன்கள் இணைக்கப்பெற்றிருக்கின்றன. உங்கள் அதிஷ்டங்களை பரீட்சித்துப் பார்க்க நீங்கள் தீபாவளி வாழ்த்து வாங்கும்பொழுது 'மொடேர்ன் தீபாவளி வாழ்த்து'' என்று கேட்டு வாங்க மறவாதீர்கள். உங்கள் தீபாவளி வாழ்த்துக்களிலுள்ள 'பரிசுக் கூப்பன்களை' பத்திரமாக வைத்திருங்கள் பரிசு பெற்ற இலக்கங்கள் 31-10-70 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும். எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

★ வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு ★

மாணவர்களே!.

எமது தீபாவளி பரிசில்களை நீங்களும் பெற வேண்டுமா? முழு விபரங்களுக்கும் எம்மிடம் நேரில் தொடர்பு கொள்ளுங்கள்.

## மொடேர்ன் பேணிச்சர்

79/2, கஸ்தூரியார் வீதி,    யாழ்ப்பாணம்.

போன்: 7364



## தீபாவளி மலிவு விற்பனை!

உங்களுக்கும் உங்கள் குழந்தைச்செல்வங்களுக்கும்

உகந்த

★ கைத்தறி நெக்கா ★ பிறின்ரட் நைலக்ஸ்

★ சிலோன்மணிப்புரி ★ பிளேன் நைலக்ஸ்

★ பிளேன்வோயில் ★ பிறின்ரட் வோயில்

★ ஜொயின்ட் நைலக்ஸ் ★ றெடிமேட்புளவ்ஸ்

சேட்டிங் — சூட்டிங் — சன்சூட்ஸ்

மற்றும்

சகலவிதமான ஜவுளி வகைகளும்

கண்கவர் வண்ணக்கலர்களில் எமது கைவசமுண்டு.

உங்களின் தீபாவளித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள எம்மிடம் விஜயம் செய்யுங்கள்.

# சீப்சைட்

(வடஇலங்கையின் புகழ்பெற்ற புடவை மாளிகை)

186-188, கே. கே. எஸ். றேட் — யாழ்ப்பாணம்.

(போன்: 479)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் குவபெக் விடுதலை இயக்கம் தடை செய்யப்பட்டது!

## தீவிர வாதிகளை ராணுவம் வேட்டையாடுகிறது

ஒட்டாவா, அக். 17

கனடாவில் குவபெக் மாகாண விடுதலை இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளது.

அண்மையில், பிரிட்டிஷ் ராஜதந்திரி ஒருவரும், குவபெக் தொழில் மந்திரியும் கடத்தப்பட்டதற்கு இந்த இயக்கமே காரணம்.

இந்த இருவரையும் விடுவிப்பதற்கு கனடா அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வரும் அதேசமயம் இந்தக் கடத்தல்களுக்கு காரணமாக விருக்கும் நபர்களையும் அவர்களுக்கு ஆதரவளிப்பவர்களையும் கண்டுபிடித்து தண்டிப்பதற்கும் தீவிர நடவடிக்கைகள் எடுத்துவருகின்றது.

குவபெக் விடுதலை இயக்கத்தின் பயங்கர நடவடிக்கைகளின் காரணமாக கனடா நேற்று அவசர நிலைமையைப் பிரகடனப்படுத்தி இந்த இயக்கத்தை தடை செய்யும் சட்டம்ஒன்றையும் நிறைவேற்றியிருக்கின்றது.

இந்தச் சட்டத்தின்கீழ் மேற்படி பயங்கர இயக்கத்தைச் சேர்ந்தவர்களையும் அவர்களுக்கு ஆதரவு அளிப்பவர்களையும் கைதுசெய்து மூன்று வாரங்கள் வரையில் விசாரணையின்றி காவலில் வைக்கவும் விசாரணையின்பின் 5 வருடங்கள்வரை சிறைத்தண்டனை விதிக்கவும் வகைசெய்யப்பட்டுள்ளது.

இந்தச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மொன்ட்ரியாப் பகுதிக்கு சுமார் ஆயிரம் துருப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. மேற்கொண்டும் படைகள் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளன. தீவிரவாதிகள் இருக்கும் இடமாகக் கருதப்படும் பகுதிகள் யாவும் சல்லடைபோட்டு சலிக்குமாப்போல் துருப்பினர் தேடுதல் ஆரம்பித்துள்ளனர். ஏற்கனவே 250 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். தீவிரவாதிகளுக்காக பேரம் பேசுவதில் ஈடுபட்டிருந்த வழக்கறிஞரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பிரிட்டிஷ் ராஜதந்திரி ஜேம்ஸ் குரோஸ் என்பவரையும் குவபெக் தொழில் அமைச்சர்பீரிலாபோர்ட்டே என்பவரையும் விடுவிப்பதற்காக பயங்கரவாதிகள் விதித்த நிபந்தனைகளில் ஒரு பகுதியை நிறைவேற்ற குவபெக் அரசாங்கம் முதலில் இணக்கம் தெரிவித்திருந்தது. இவர்கள் விடுதலை செய்யப்படுவதற்கு பரிகாரமாக சிறையிலுள்ள 5 தீவிர வாதிகளை விடுவிக்க அரசாங்கம் ஒப்புக்கொண்டது. ஆனால் குவபெக் விடுதலை இயக்கத்தினர் கோரியதுபோல் சிறையிலுள்ள 23 தீவிரவாதிகளையும் விடுதலைசெய்ய அரசாங்கம்மறுத்துவிட்டது. இதுவே இறுதி முடிவு என்றும் அரசாங்கம் அறிவித்திருந்தது. விடுதலை செய்யப்படும் தீவிர வாதிகளை அவர்கள் விரும்பும் ஒரு நாட்டுக்கு பத்திரமாக அனுப்பிவைக்கவும் அரசாங்கம் இணங்கியிருந்தது. ஆனால் எதிர்பார்த்தபடி தீவிரவாதிகளின் இயக்கம் நடந்துகொள்ளாததால் அரசாங்கம் கடும் நடவடிக்கைகள் எடுக்க துணிந்துவிட்டது.

புதிய நடவடிக்கைகளுக்கான சட்டம் ஆட்சிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டபொழுது எதிர்க்கட்சியினர் அரசாங்கத்துக்கு கிலி பிடித்துவிட்டதாகக்கூறி குற்றஞ்சாட்டினார்கள்.

தீவிரவாதிகள்மீது யுத்தப் பிரகடனம் செய்ததுபோல் அரசு நடந்துகொள்வதாகவும் சிலர் குற்றஞ்சாட்டியதாகத் தெரிகின்றது.

ஜோர்டான்

### ராணுவ கவர்னர் பதவிநீக்கம்

அம்மான், அக். 17

ஜோர்டான் ராணுவ ஆட்சியில் கவர்னர் ஜெனரல் பீல்ட் மார்ஷல் ஜோலி பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

சிறிதுகாலம்ஜோர்டானில் ஏற்பட்ட குழப்பத்தை அடுத்து மன்னர் ஹுசேன் ராணுவ அரசாங்கத்தை அமைத்தார். அவ்வரசின் கவர்னர் ஜெனரலாக ராணுவத் தளபதி மஜாலியை நியமித்திருந்தார்,

இப்பொழுது ஜோர்டானில் அமைதிநிலவுகிறது. இப்பதவிநீக்கம் ஜோர்டானில் சிவில் அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கு மன்னர் எடுக்கும் முதல் நடவடிக்கையாக இருக்கலாம் என அரசியல்அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

மஜாலியின் பொறுப்புகள் தற்போதைய ஜோர்டானியப் பிரதமருக்கு வழங்கப்படுகின்றன. ——

### சிரமதானம்

பருத்தித்துறை, சனி

அல்வாயில் அமைக்கப்பட்டு வரும் ஆச்சிரமத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் மரங்களையும் பற்றைகளையும் வெட்டித் துப்புரவாக்கும் பணியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 40 சாரணர் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

சாரண ஆசிரியர் திரு அ. ஜெகநாதனும் இப்பணியிற் கலந்துகொண்டார். ஆச்சிரமத்தைச் சேர்ந்த அடிகள் மாணவருக்குத் தேநீர்விருந்தளித்துப் பாராட்டினர்.

சுவிஸ்நாட்டிடம்

# கேணல் ஒஜுக்கு தஞ்சம் கோருகிருர்

பேர்ன், அக். 17

முன்னுள் பியாப்ராவின் தலைவர் கேர்னல் ஒஜுக்குவை ஐஸ்வரிகோஸ்டை விட்டு வெளியேறுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது என்று தெரிகின்றது. கேர்னல் ஒஜுக்கு பயாப்ராவை விட்டு ஐஸ்வரிகோஸ்டில் தஞ்சம் கோரியபொழுது சில நிபந்தனைகளின்பேரில் அவருக்கு ஐஸ்வரிகோஸ்ட் அரசாங்கம் தஞ்சம் அளித்தது. ஆனால் தற்பொழுது கேர்னல் ஒஜுக்கு ஒலிபரப்பொன்றில் அந்நிபந்தனைகளில் சிலவற்றை மீறியதனாலேயே அரசாங்கம் இவரை வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளது. இப்பொழுது கேர்னல் ஒஜுக்கு சுவிற்சர்லாந்தில் தஞ்சம் கோரியுள்ளார். இதுபற்றி சுவிற்சர்லாந்து அரசாங்கம் ஆராய்ந்துவருகிறது.

நைஜீரிய சமஷ்டியின் ஒரு பகுதியான பியப்ராவுக்கு சுதந்திரம் கோரி இவர் ஆயுதப் போராட்டம் நடத்தினர். பியாப்ராவின் தலைவராக இவர் விளங்கினர். நைஜீரிய சமஷ்டிப் படைகளுக்கும், பியாப்ராப் படைகளுக்கும் யுத்தம் நடைபெற்றது. இதனல் பியாப்ராவில் பசியும் பட்டினியும் ஏற்பட்டு பல லட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். பஞ்சம்காரணமாகவும், நைஜீரிய சமஷ்டிப் படைகளின் கடும்தாக்குதலினலும் பியாப்ராப்படைகள் பின்வாங்கி சரண் அடைந்தன. இதனல் பியாப்ராப் படைத் தளபதியான கேர்னல் ஒஜுக்கு ஐவரிகோஸ்டில் தஞ்சம் புகுந்தார். ——

### மகாபாரதம்

தாவடி, சனி

தாவடி மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில், சைவ இளைஞர் மன்றத்தின் சார்பில் தினமும் இரவு 7 மணிக்கு மேல், திரு. சி. சின்னத்தம்பியினல் ''மகாபாரதம்'' படிக்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தின்

## 24 புதிய மாவட்ட களஞ்சியம் நிறுவப்படும்

கோட்டை, சனி

அடுத்தாண்டு ஜனவரி மாதத்திலிருந்து பருப்பு வகைகள், பம்பாய் வெங்காயம், டிராக்டர் ரயர்கள், ரியூப்புக்கள் ஆகியவற்றை அரசாங்கமே கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனங்களின் மூலம் விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது. தற்போது தனியார் நிறுவனங்களே இவற்றை விற்பனை செய்கின்றன.

இனிமேல் மேற்படி பொருட்களையும் மற்றும் பிரதான பொருட்களையும் அரசாங்கமே இறக்குமதி செ[...] விநியோகம் செய்யவுள்ளது. கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் பருப்பு வகைகள், பம்பாய் வெங்காயம், டிராக்டர் ரியூப் ஆகியவற்றை இறக்குமதி செய்யும் ஏகபோக உரிமையைப் பெற்று விளங்கும்.

இதுவரை மேற்படி பொருள்களின் வியாபாரத்தில் தனியார் ஸ்தாபனங்களே ஈடுபட்டிருந்தன. கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் 24 புதிய மாவட்ட களஞ்சியங்களை நிறுவவிருக்கிறது. இத்துடன் நாட்டின் பல பகுதிகளிலும் பெரிய கூட்டுறவு சங்கங்களும் நிறுவப்படவுள்ளன.

# பிரிட்டனைத்துரத்தவேண்டும் காமன்வெல்த்திலிருந்து!

## சாம்பியா அதிபரின் சீற்றம்

லண்டன், அக். 17

பிரிட்டன் தென்னுபிரிக்காவுக்கு ஆயுதம் கொடுக்குமானுல் சிங்கப்பூரில் நடக்கவிருக்கும் அடுத்த காமன்வெல்த் தலைவர்கள் மகாநாட்டுக்குத் தாம் போகப்போவதில்லை என்று சாம்பியா அதிபர் கென்னத் கவுண்டா கூறினுர். தென்னுபிரிக்காவுக்கு ஆயுதம்வழங்கினுல் பிரிட்டனை காமன்வெல்த்திலிருந்து வெளியேற்றவேண்டும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

தென்னுபிரிக்காவிற்கு பிரிட்டன் ஆயுதங்கள் கொடுப்பதானுல் ஆபிரிக்காவிலும் சாம்ராஜ்ய நாடுகளிலும் அபாயகரமான நிலைமைகள் உருவாகும் என சாம்பியா ஜனுதிபதி கவுண்டா கூறினுர்.

ஆபிரிக்க நாடுகளின் ஒற்றுமை ஸ்தாபனத்தின் குழுவுக்கு தலைமை வகித்து லண்டன் வந்திருக்கும் திரு. கவுண்டா இங்கிலாந்துப் பிரதமர் திரு. ஹீத்தை டவுனிங் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தார்.

பிரிட்டன் தென்ஆபிரிக்காவுக்கு ஆயுத விற்பனை செய்வதினுல் அங்குள்ள ஆபிரிக்க மக்கள் ஒடுக்கப்படுவதோடு, ஜனநாயகமும் அழியும்' இதனுல் ஆபிரிக்கா, சாம்ராஜ்ய நாடுகள் ஆகியவற்றில் அபாயகரமான நிலைமைகளும், விபரீதபோக்குகளும் ஏற்பட்டு அமைதி கெட்டுவிடும் என அவர் மேலும் கூறினுர்.

இதேபோன்று பிரிட்டன் தென்ஆபிரிக்காவுக்கு ஆயுத உதவி செய்வதற்கு கானு பிரதமரும் ஆட்சேபம் தெரிவித்தார். பிரிட்டனைகாமன்வெல்த்திலிருந்து வெளியேற்றவேண்டும் என்பதையும் அவர் ஆதரித்தார்.

இந்த ஆட்சேபனைகள் சம்பந்தமாக தனது சகமந்திரிகளுடன் பேசப்போவதாகவும், சகல சாம்ராஜ்ய நாடுகளின்தலைவர்களுடன் தான் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாகவும் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹீத் இன்று லண்டனில் தெரிவித்தார்.

# அப்பலோ-15 இறங்கும் இலக்கு இப்பொழுதே தீர்மானம்

வாஷிங்டன், அக். 17

அடுத்தஜுலையில் செலுத்தப்பட இருக்கும் 15-வது அப்பலோ கப்பல் நிலாவில் எங்குபோய் இறங்கவேண்டுமென்ற இலக்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஹாட்லி-அப்பனின் பகுதி என்று குறிக்கப்பெறும் நிலாச் சமவெளியில் அப்பலோ 15 போய் இறங்கும்.

இந்த இலக்கில் ஒரு பக்கத்தில் நிலாவின் உயரமான மலைப்பகுதி-8000 அடி உயரமுள்ள அப்பனின் மலைத்தொடர்ச்சி இருக்கிறது. மறு மக்கத்தில் வளைந்து வளைந்து செல்லும் ஒரு கணவாய் 600 அடி ஆழமுள்ள ஹாட்லிமலைஇடுக்கு இருக்கிறது. அதன் அகலம் அரை மைல். நிலா மேற்பரப்பில்60 மைல் தொலைவுக்கு இது ஓடுகிறது.

பூமியிலிருந்து பார்க்கும் போது தெரியும் நிலாமுகம் ஒரு கடிகாரத்தின் முகப்பு என்று வைத்துக்கொண்டால், பகல் 12 மணியாகி ஒரு நிமிஷத்துக்குப் பெரிய முள் எங்கிருக்குமோ, அந்த இடத்தில் ஹாட்லி-அப்பனென் இலக்கு இருக்கும். நிலா மையத்திலிருந்து,மூன்றில் ஒரு பகுதி நீளமுள்ளது. இந்த இலக்கு.

நிலாவில் இதுவரை மனிதர்கள் இறங்கியுள்ள இடங்களில் எல்லாம் மிகவும் வடக்கிலுள்ளது. இந்த இலக்கு.மாருக. அப்பலோ 11, 12 நிலா வீரர்கள் போயிறங்கிய இலக்குகளும், அப்பலோ 14 வீரர்கள் போயிறங்க இருக்கும் இலக்கும் நிலா மையக் கோட்டிலிருந்து 70 மைல் தொலைவுக்குள்ளாகவே இருக்கின்றன.

### விஞ்ஞானப் பலன்கள்

ஹாட்லி-அப்பனென் பகுதி வளமான விஞ்ஞானப்பலன்கள் நல்குமென எதிர்பார்க்கிருர்கள். மலையடிவாரத்திலிருந்து விண்வெளி வீரர் நிலாப் பொருட்களைத் திரட்டுவார்கள். இவற்றில் சில பழைய நிலாமுகடு இருந்த காலத்தைச் சேர்ந்தவையாக, ஒருவேளை 400 கோடி ஆண்டுகளுக்கு முந்திய காலத்தவையாக இருக்கலாம். ஒரு விண்வீழ்கொள்ளியின் தாக்குதலால் அருகிலுள்ள 'இம்பிரியம்' சமவெளி தோன்றுவதற்கு முன்பு ஏற்பட்டவையாக அவை இருக்கக் கூடும் விண்வெளி வீரர் ளில் ஒருபகுதி, விண்வீழ் கொள்ளிதாக்குகையில் நிலாவின் உட்பகுதியிலிருந்து வெளிவந்த கற்களாக இருக்கலாம்.

அப்பலோ-16,17 பயணங்கள் 1972 ஜனவரி, ஜுலை மாதங்களில் நடைபெறத் திட்டமிட்டிருக்கிருர்கள். இந்தப்பயணங்களின் போது நிலாவில் இறங்கும் இலக்குகளும் நெடு நாட்களுக்கு முன்னதாகவே தெரிவு செய்யப் பெறவேண்டும்.

தொன்மையான பாறைகளையும், பிற பயனுள்ள மாதிரிப் பொருட்களையும் 14-வது அப்பலோ விமானிகள் பூமிக்குக் கொண்டு வருவார்கள் என எதிர்பார்க்கிருர்கள். இவர்கள் நிலாவில் போய் இறங்கும் ஃபிரா மாரோ பகுதியில் நிலாவின் உட்பகுதியிலிருந்து வெளிவந்த கூழாங்கற்கள் சிதறிக்கிடப்பதாக நம்புகிருர்கள். ஒரு பெரிய விண்வீழ்கல் நிலாவை வலுவாகத் தாக்கியபோது. அருகிலுள்ள புயல் கடல் பகுதி தோன்றியது.

தானியங்கு பொறி எதையும் நிலாவுக்கு இனிமேல் அனுப்ப அமெரிக்கா திட்டமிடவில்லை. பாக்கியுள்ள நான்கு அப்பலோ பயணங்களும் முடிந்தபின்பு, அமெரிக்காவின் நிலாஆராய்ச்சித் திட்டம் நிறுத்தி வைக்கப்படும்.

வியட்ஞம் யுத்தத்தில்

## அமெரிக்கர் பாவிக்கும் நச்சுத்திராவகம்

லண்டன், அக். 17 ...கர்கள் நச்சு பிரயோகித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியட்நாம் யுத்தத்தில்

# அமெரிக்கர் பாவிக்கும் நச்சுத்திராவகம்

லண்டன், அக். 17

வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்கா விஷ ரசாயன வகைகளை பிரயோகிப்பதன் விளைவாக எவ்வித உயிரும் வாழ முடியாத உலகின் முதல் பகுதியாக வியட்நாம் நாசமடையக்கூடும்.

மேற்கண்டவாறு பிரிட்டனின் தலைசிறந்த பத்திரிகையாளராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஜான் பில்ஜர் சைகோனிலிருந்து லண்டன் பத்திரிகையான 'டெயிலி மிரர்' க்கு வரைந்துள்ள கட்டுரைத் தொடரில் கூறியுள்ளார்.

அங்கஹீனமுற்ற குழந்தைகள் மேலும் தென்வியட்நாமில் பிறக்கின்றன. 'இக்குழந்தைகளின் தாய்மார் நச்சுப்படுத்தப்பட்ட நீரையும் உணவையும் புசிப்பதாலேயே இக்கோரம் ஏற்பட்டுள்ளது' என்று ஒரு டாக்டர் கூறியதாக திரு. பில்ஜர் எழுதுகிறார்.

'அமெரிக்கர்களால் நச்சுப்படுத்தப்படாத ஒரு வஸ்து கூட எம் மாகாணத்தில் கிடையாது' என்று பிரஸ்தாப டாக்டர் கூறினாராம்.

மரங்களையும் தானியங்களையும் சாகடிக்க அமெரிக்கர்கள் நச்சு பிரயோகித்த பிரதேசங்களிலேயே இப்படியான குழந்தைகள் பிறந்தனரென்று தெரியவந்தது.

1961 முதலாக வியட்நாம் மண்ணில் 12 சத வீதமான பகுதியில் 50,000 தொன் "2.4. 5-டி" நச்சுத் திராவகத்தை அமெரிக்கா பரப்பியுள்ளது என்று திரு. பில்ஜர் கூறுகிறார்.

இன்றுவரை தென்வியட்நாம் பிரதேசத்தில் கால்வாசி தரிசாகிவிட்டது; உயிர்வாழ முடியாத வெற்றிடமாக மாறிவருகிறது.

நச்சுத்திராவகத்தால் பாதிக்கப்பட்டு சேதமுற்றுள்ள மரங்கள் இனிமேல் தளிர்விடமாட்டா.

தென்வியட்நாமில் அநேக பகுதிகள் முற்றுமே ஜீவராசிகளற்ற பாலை நிலமாகி வருவதை அமெரிக்க உயர் அதிகாரிகளே உண்மையென ஏற்கின்றனர்.

இனிமேல் மரங்களில் தளிர்தோன்றாது; மேய்ச்சல் நிலங்களும் தோட்டங்களும் மறைந்துவிடும்; றப்பர் தோட்டங்களும் நெல் வயல்களும் பாழடைந்துவிடும்; புல்லினங்கள் ஏற்கனவே மடிந்துவிட்டன.

## உத்தர பிரதேசத்தில்

# ஜனாதிபதி ஆட்சி முடிகிறது


புதுடில்லி, அக். 17

உத்தரப்பிரதேச மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி ஒரு முடிவுக்கு வருகிறது. அங்கு பிரகடனப்படுத்தப்பட்ட ஜனாதிபதி ஆட்சி அகற்றப்படும் என்று தெரிகிறது. உத்தரப்பிரதேச கவர்னர் டாக்டர் கோபால ரெட்டி புதிய அரசாங்கம் அமைப்பதற்குரிய வாய்ப்பு இருப்பதாக ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் கூறியுள்ளாரென்றும் நம்பப்படுகின்றது. ஐந்து கட்சிகளை கொண்டு அமைக்கப்பட்ட சம்யுத்த விதாயக்தளம் இப்பொழுது அரசாங்கம் அமைப்பதற்கு பலம் பொருந்தியதாக இருப்பதனால், புதிய அரசு அமைப்பதற்கு உத்தரப்பிரதேச கவர்னர் கோபால ரெட்டி விரும்புவதாக அறியப்படுகிறது. பெரும்பான்மைப் பலமுள்ள சம்யுத்த விதாயக் தளத்தின் தலைவர் திரு. டி. என். சிங். அரசை அமைக்கும்படி கோரப்படுவார் எனத்தெரியவருகிறது

இங்கு ஜனாதிபதி ஆட்சியை நீக்கி புதிய அரசை அமைப்பதற்கு முடிவெடுக்கப்படுவதான செய்தியை எதிர்க்கட்சிகள் வரவேற்றுள்ளன. சின்டிக்கேட் தலைவர்கள் திரு. ராம் சுபாசிங் திரு. நிஜலிங்கப்பா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் திரு. என். வி கூரே ஆகியோர் இம்முடிவை வரவேற்றுள்ளனர்

திரு. சரண்சிங் தலைமையில் அமைந்த கூட்டரசாங்கத்திற்கு இந்திரா காங்கிரஸ் கொடுத்துவந்த ஆதரவை

(4-ம் பக்கம் பார்க்க)


# யாழ்க்குடா விவசாயிகளே!

### உங்கள் அபிமான இரு சில்லு ட்ராக்டர் லான்ட்மாஸ்டர் 150.

பூவுலகின் எத்திசையிலும், லான்ட்மாஸ்டர் 150 ஒன்று நிச்சயமிருக்கக் காண்பீர்கள். பலமானது நம்பிக்கையானது. அமோக பணிகள் பல புரியவல்லது. நானிலமெங்கும் பரவிய சேவை வசதிகள் கொண்டது.

இத்தகைய தகுதிகள் கொண்ட வலிமிகு பணியாளியின் உருவாக்கம் ஓர் இலங்கையரையே சாரும். ஆசிய நிலைமைகளை மனதிற் கொண்டு உருவான இவ்வுயர் படைப்பு இலங்கையில் 2000த்திற்கும் அதிகமான விவசாயிகளால் பாவிக்கப்படுகிறது. நாடெங்கிலும், பயிற்சி பெற்ற. வேண்டிய உபகரணம் கொண்ட, சேவை நிலையங்கள் உதவி பின் கொண்டது. உங்கள் தேவைகளுக்குத் தக்கதாக வேண்டிய மேலதிக உபகரணங்கள், உருப்புக்கள் வசதியும் கொண்டது லான்ட்மாஸ்டர்.

லான்ட்மாஸ்டர் 150, இலகுவாகச் செலுத்துக் கூடியது. வேண்டியபோது உழுதலைக் கூட்டலாம்.

உங்கள் வருவாய்க்குத் தகுந்த இலகுவான பணக்கட்டண வசதிகள் உள்ளன.

புதிய விநியோகஸ்தர்: ஈ. சி. செல்வராஜன்
'பார்ம் சேர்விசஸ்'
55 முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

மேல் விபரங்களுக்கு, கூப்பனை நிரப்பி அனுப்பவும்

பெயர்..........................................................

முகவரி..........................................................

BG லான்ட்மாஸ்டர் 150


யாக, ஒருவேளை 400 கோடி ஆண்டுகளுக்கு முந்திய காலத்தவையாக இருக்கலாம். ஒரு விண்வீழ்கொள்ளியின் தாக்குதலால் அருகிலுள்ள 'இம்பிரியம்' சமவெளி தோன்றுவதற்கு முன்பு ஏற்பட்டவையாக அவை இருக்கக் கூடும் விண்வெளி வீரர்கள் திரட்டும் பொருட்கயது.

தானியங்கு பொறி எதையும் நிலாவுக்கு இனிமேல் அனுப்ப அமெரிக்கா திட்டமிடவில்லை. பாக்கியுள்ள நான்கு அப்பலோ பயணங்களும் முடிந்த பின்பு, அமெரிக்காவின் நிலா ஆராய்ச்சித் திட்டம் நிறுத்தி வைக்கப்படும்.

......

# அமெரிக்காதான் அமைதியைக் குலைக்கிறது

## ஐ.நா சபையில் எகிப்து மந்திரிசாட்டை

நியுயோர்க், அக். 17

அமெரிக்கா அரபுகளைப் பணிய வைக்க முயல்கிறது. மேற்காசியாவில் அமைதியையும் போர் ஒய்வையும் நிலைநிறுத்த முடியாமல் இருப்பதற்கு அமெரிக்காவே காரணமாகும் என்று ஐ. அ குடியரசின் வெளிநாட்டமைச்சர் டாக்டர் றியாத் கண்டனம் தெரிவித்தார்.

ஐ. நா. சபையின் பொதுச் சபை வெள்ளிவிழாக்கொண்டாட்டத்தில் அவர் உரையாற்றுகையில் சூயஸ்கால்வாய் பகுதியில் இஸ்ரேல் செய்யும் போர்ஓய்வு மீறல்களுக்கு ஐ. நா. சபை பாராமுகமாக இருக்கிறது. அமெரிக்காவும் இஸ்ரேலும் ஐ. அ. குடியரசுமீது சுமத்தும் குற்றச்சாட்டுகள் பொய்யானவை ஆகஸ்ட்மாதம் செய்து கொள்ளப்பட்ட போர்ஒய்வுக்குப்பின் சூயஸ் கால்வாய்ப் பகுதியில் ஏவ்வித ஏவுகணைத் தளங்களும் நிறுவப்படவில்லை. அமெரிக்கா தன்னைச் சமாதானப்பிரியன் என்று சொல்லிக் கொண்டே மேற்காசியாவில் குழப்பத்தை விளைவிக்கின்றது என்றார்.

அவர் மேலும் பேசுகையில் மேற்காசியா பற்றி முழு அளவிலான விவாதம் ஒன்றை நடத்தவேண்டுமென்றே ஐ. அ. குடியரசு விரும்புகின்றது என்றார்.

இவரது கண்டனங்களுக்கு அமெரிக்கப் பிரதிநிதியும் இஸ்ரேல் பிரதிநிதியும் பதிலளித்துப் பேசினார்கள். கோபதாபங்களைக் கொட்டிப் பேசாமல்எல்லாத்தரப்பினரும் உண்மையான அமைதியை ஏற்படுத்துவதற்கு முயற்சிசெய்யவேண்டும் என்று அமெரிக்கப் பிரதிநிதி கேட்டுக்கொண்டார். திரு. றியாத் தெரிவித்த குற்றச்சாட்டுகளை அவர் மறுத்தார்.

......

# வல்லிபுர ஆழ்வார் உற்சவம் பூர்த்தி

அம்பன், சனி

வல்லிபுர ஆழ்வார் உற்சவம் தீர்த்தோற்சவத்துடன் பூர்த்தியடைந்தது.

வல்லிபுர ஆழ்வார் தேரேற வரும்பொழுதும் சமுத்திர தீர்த்தமாடச் செல்லுகையிலும் ஆலயக் கதவின் மேற்பாகத்தாலேயே வெளியில் கொண்டு வரப்பட்டார். ஆலயக் கதவுகள் பூட்டப்பட்டே இருந்தது. கதவுகளில் அரைவாசிப்பாகத்திற்கு மேல் சுவாமி வெளிக்கொணரக் கூடிய முறையில் அகற்றப்பட்டிருந்தன. தேரிலன்று அங்கு பெருமழை கொட்டியதால் அடியார் கூட்டம் அல்லலுற நேர்ந்தது. இருந்தும் அடியார்களும் ஆழ்வார் அருளீய்ந்ததால் மழை ஒழிந்தது. சமுத்திர தீர்த்தமாட அடியவன் அடிநோக்க ஆர்ப்பரித்த ஆழ்கடல் அலைகளெல்லாம் அமைதியில் தூங்கின. ஆழ்வார் அமைதியின் நடுவிலே ஆழியில் ஆனந்த திருமுழுக்காடினர். பக்தகோடிகள் பக்திப் பெருக்கால் 'அரோகரா' எனக் கோஷமிட்டு அவன் நாமம் ஓதித் தீர்த்தமாடினர். கோயில் உற்சவத்தின்போது களவுகள் அசம்பாவிதங்கள் நடைபெறவில்லை.

— —

கோட்டை, சனி

கடந்த வியாழக்கிழமையன்று 30,000 ரூபா பெறுமதியான தங்கக் கட்டிகளை கொழும்பு துறைமுகத்தில் இரு மாலுமிகளிடமிருந்து சுங்க அதிகாரி திரு. பாக்கியநாதன் தலைமையில் சென்ற சுங்கப்பகுதியினர் கைப்பற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

வெறுப்பை அன்பே முறியடிக்கவேண்டும்; ஏனென்றால், வெறுப்பு தன்னைத்தானே முறியடித்துக்கொள்ள முடியாது. —விவேகானந்தர்.

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஐப்பசி மாதம் 1-ந் திகதி (18-10-70)


## தாமதம் ஏன்?

பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு பரீட்சைகளும் நேர்முகப் பரீட்சைகளும் முடிவடைந்துவிட்டன. சிங்களப் பட்டதாரிகள் இருநூறு பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுவிட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன. தமிழ்ப் பட்டதாரிகள் நியமனம் தாமதப்படுத்தப்பட்டிருக்கிறது. விண்ணப்பங்கள் அனுப்பி நேர்முகப் பரீட்சைக்கு சென்று திரும்பியோர் ஆவலுடன் பதிலுக்காகக் காத்திருக்கின்றனர். தங்கள் பிள்ளைகளைக் கஷ்டப்பட்டு படிக்கவைத்த பெற்றோரின் நிலையைச் சொல்லவேண்டியதில்லை.

இதேசமயம் பல்கலைக்கழகப் பிரவேசப் பரீட்சை எடுத்து பட்டப் படிப்புப் பெறுவதற்குத் தகுதிஉள்ளவர்கள் என்று தெரிவு செய்யப்பட்ட பின்னரும் பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்குமா என்ற ஏக்கத்துடன் பல மாணவர்கள் காத்திருக்கின்றனர். இது பற்றியும் இன்னும் ஒரு முடிவும் கிடைக்கவில்லை. இதிலும் தாமதம்.

பல்கலைக்கழகப் பொறியியல் பிரிவுக்குப் பிரவேசப் பரீட்சைஎழுதிச் சித்தியெய்தியவர்களில் பெரும்பான்மையானோர் தமிழர்களாக இருந்ததால் அவர்களுடைய திறமையில் சிலருக்குஎழுந்த சந்தேகம் பெரிதுபடுத்தப்பட்டதன் விளைவாக பொறுப்புவாய்ந்தவர்களைக் கொண்ட ஒரு குழு அந்த மாணவர்களுக்கு பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாவென்பது பற்றி ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டது. விடைத்தாள்களை மறுபரிசீலனை செய்த அந்தக் குழு சிறிதும் சந்தேகத்துக்கு இடமின்றி மாணவர்களின் திறமைக்கு சான்று வழங்கியது.

ஆனாலும் பிரச்னை ஓய்ந்துவிடவில்லை. திறமையையும் தகுதியையும்விட வகுப்புவாதக்கண்கொண்டு நோக்கும் மனப்பான்மை விட்டுப்

பல்கலைக்கழகப் பொறியியல் பிரிவுக்குப் பிரவேசப் பரீட்சை எடுத்துச் சித்தியெய்திய மாணவர்களுக்கு அவர்களுடைய திறமைக்கு விசாரணைக் குழுவொன்று சான்று வழங்கியபின்னரும் கூட பல்கலைக்கழகங்களில் மாணவர்களை அனுமதிப்பது பற்றி இன்னமும் ஏன் தாமதம் ஏற்படுகிறதென்பது விந்தையே!

பட்டப் படிப்புப் பெறுவதற்குத் தகுதியும் திறமையும் இருந்தும் தமிழர்களாகப் பிறந்துவிட்ட காரணத்தினால் இந்த அவல நிலையா என்று மாணவர்களும் அவர்களது பெற்றோரும் மனம்நோகவேண்டியுள்ளனர்.

தேசிய உயர்கல்விச் சபையின் தலைவிதியே ஆட்டம் கண்டுகொண்டிருக்கிறது.

பல்கலைக்கழகங்களில் மாணவர்களை அனுமதிப்பது சம்பந்தமாக தேசிய உயர்கல்விச்சபையும் கல்வி அமைச்சும் மண்டையை உடைத்துக்கொண்டு மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் மண்டையிடியைக் கொடுத்துக்கொண்டும் அவதிப்படுவதைவிட மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் பொறுப்பை பல்கலைக்கழகங்களிடமே விட்டுவிட்டால் என்ன?

பட்டப்படிப்புக்கு இடம் கிடைக்குமா என்று தமிழ் மாணவர்கள் பலர் ஏங்கிக் கொண்டிருக்கும் அதே சமயம் ஆசிரிய நியமனம் கிடைக்குமாவென்று அதற்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கும் சென்று திரும்பிய பட்டதாரிகள்பலர் ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். தங்கள் நிலை என்னவென்பது பற்றி அறிந்துகொள்வதற்காக கல்விக்கந்தோர்களுக்கும் கட்சிக் காரியாலயங்களுக்கும் ஆட்சிமன்ற உறுப்பினர்களின் இல்லங்களுக்கும் அலுவலகங்களுக்கும் அலைந்துதிரிகின்றனர்.

அறிவுக்கும் ஆற்றலுக்கும் தான் அரசாங்கம் மதிப்பளிக்கும் என்று அமைச்சர்கள் அடிக்கடி கூறிவருகின்ற

கத்தோலிக்க உலகெங்கும் இன்று விசுவாசப் பரப்புதல் ஞாயிறு விழா கொண்டாடப்படுகிறது:

# அயலானின் கஷ்டத்தைப் போக்குவோம்

ஐப்பசி மாதத்தின் 3 வது ஞாயிற்றுக்கிழமையில் கொண்டாடப்படும் விசுவாசப் பரப்புதல்ஞாயிறு விழா கத்தோலிக்கருக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கிறிஸ்தவ விசுவாசத்தை உலகெங்கும் வளர்ப்பதே இந்நாளின் நோக்கமாகும்.

உலகின் பல்வேறு பகுதிகளிலும் பசிபட்டினியாலும், ஆடையின்றியும், நோய் வாய்ப்பட்டும் துன்பம் அனுபவித்து வரும் மக்களின் இன்னலை ஓரளவாயினும் நீக்கும் பொருட்டு கத்தோலிக்க உலகெங்கும் இன்று விசேட நிதி திரட்டப்படுகிறது. இந்த நிதியானது பரிசுத்த பாப்பரசருக்கு அனுப்பப்பட்டு பின்னர் அங்கிருந்து பல நாடுகளுக்கும் அனுப்பப்படுகிறது.

இந்நாளையொட்டி இன்று கத்தோலிக்க ஆலயங்கள் எங்கும் விசேட ஆராதனைகளும் இடம் பெறுகின்றன.

இல்லிடமற்றோராய், ஆடையற்றோராய், உணவற்றோராய் கஷ்டமுறும் எமது அயலவரைக் காக்க எம்மாலான பண உதவி புரிவோம். அப்போதுதான் கிறீஸ்து நாதர் உலக முடிவில் பொதுத் தீர்ப்பின்போது 'நான் பசியால் இறந்தேன், எனக்குப் போசனம்கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன், பானம் கொடுத்தீர்கள், இல்லிடமற்றிருந்தேன், இல்லிடம் கொடுத்தீர்கள். ஆடையற்றிருந்தேன், ஆடை கொடுத்தீர்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் செய்யப்பட்டிருக்கும் நித்திய இன்பத்தைச் சுகிக்க வாருங்கள்' என்று கூறுவார். அப்போது அவர்கள் 'எப்போது நாம் இவற்றை உமக்குச் செய்தோம்' எனக் கேட்க, என் சிறியோரில் ஒருவனுக்குச் செய்தபோது எனக்கே செய்தீர்கள் என அவர் கூறுவார்.

எனவே இன்றைய நாளில் விசேடமாக எம் விசுவாச ஒளியை அனைவரும்பெற்று உண்மை ஒளியான கடவுளை அறியும்பொருட்டு செபம், பரித்தியாகம், தர்மம் என்பவற்றால் எம் அயலார்க்கு உதவுவோம். இன்றைய நாளில் மட்டுமல்லாது தினமும் இதனைக் கைக்கொண்டு மருவோமானால் கடவுள் வாக்களித்த முடிவில்லாப் பேரின்ப வாழ்வு எமக்குக் கிடைப்பது உறுதி.

'ஈழநாடு' ஆதரவில்

# தீபாவளிப் பெருவிழா

'ஈழநாடு' ஆதரவில் தீபாவளித் தினத்தன்று யாழ் கோட்டை மைதானத்தில் நடைபெறவிருக்கும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் கீழே கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி, 'ஈழநாடு' த. பெ. எண் 49 யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கோ, திரு எம். பூபாலசிங்கம் ஜே. பி. 'ஸ்டீல் சன்ஸ்' ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கோ அனுப்பலாம் அல்லது நேரிலும் கொண்டு வந்து கொடுக்கலாம். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'சவாரிப்போட்டி' என்று குறிப்பிட வேண்டும் 28-10-70 நண்பகல் வரை விண்ணப்பங்கள் அனுப்பலாம்.

தீபாவளிக் கலைவிழா, மற்றும் பரிசுப் போட்டிகள் பற்றிய விபரங்களை அறிவதற்குத் தொடர்ந்து 'ஈழநாடு' படியுங்கள்.

இப்போட்டியில் பங்குபற்றக் கூடிய தகுதியை நான் அத்தாட்சிப் படுத்துவதுடன், இப்போட்டியில் பங்குபற்றுவதனால் எனக்கோ எனது உடைமைகளுக்கோ ஏற்படும் காயம் அல்லது சேதங்களுக்கு நானே பொறுப்பாளி என்பதையும் ஏற்றுக்கொள்ளுகிறேன். எனக்கேற்படக் கூடிய காயம் அல்லது நஷ்டத்துக்கு போட்டிநிர்வாகிகளிடமிருந்தோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளிடமிருந்தோ அல்லது நியமிக்கப்பட்ட எந்த அதிகாரிகளிடமிருந்தோ எந்தவித நஷ்டஈடும் கோரமாட்டேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

போட்டியாளரின் பெயர் ..............................

பங்குபற்றும் பிரிவு —..............—..............

விலாசம் ..............................

வயது ..............................

மேற்கூறிய தகவல்கள் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

.............. திகதி

.............. போட்டியாளரின் கையொப்பம்

## சுதந்திரக்கட்சி காதர் குறுக்கு விசாரணை செய்தார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தந்ததும் பொய் என்றேன்?-நான் உண்மைமகி சொல்கிறேன்.

வழ: மிராபள்ளிக்குக் கிட்ட காருக்குள் அழகக்கோன் இருந்ததைக் கண்டதென்று கூறுவது பொய் என்கிறேன்?- உண்மை,

வழ: அழகக்கோன் பள்ளி விருந்தையில் ஏறி சில வார்த்தைகளைச் சொல்லிய பின் மரத்திற்குக் கீழ் நின்று நோட்டீஸ் கொடுத்ததென்பது பொய் என்கிறேன்?- உண்மை.

வழ: தொழுகை முடிந்து ஆட்கள் வெளியில் வந்தபோது சிலருடன் அழகக்கோன் கதைத்தார்?- பள்ளிக்கு வந்து நோட்டீஸ் கொடுத்ததை நான் கண்டேன்.

வழ: இதேமாதிரி நோட்டீஸ் அழகக்கோன் கொடுக்கவில்லை?- இந்த நோட்டீசை அவர் கொடுத்தார்.

வழ: அழகக்கோனை வெகு காலமாக உமக்குத் தெரியும்?-ஆம்

வழ: வெகு காலம் புறக்டராக இருந்தார்?-ஆம்

வழ: மன்னார் பட்டின சபைக்கு அவர் முதல் தலைவராக இருந்தார்?-ஆம்

வழ: 56-ம் ஆண்டு முதல் மன்னார் எம். பி.யாக இருந்துவருகிறார்?-ஆம்

வழ: அந்தப் பகுதியில் மதிப்புக்குரிய மனிதர்?- நல்ல மனிதர்

வழ: அபுசகீர் மனுதாருக்கு மச்சான்?- எனக்குத் தெரியாது

நீதியரசர்: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டத்திற்குப் போனீர்?-ஆம்.

நீதி: இன்றைய கல்வி மந்திரி பேச்சாளராக இருந்தார்?-ஆம்

நீதி: என்ன கேள்வி கேட்டீர்?- மந்திரிமார்கள் வருவார்கள். கல்லு வைப்பார்கள் புல்லுத்தான் முளைக்கும் என்றார் பதியுதீன் மஹ்மூத். நான் கேட்டேன் நீங்கள் சுகாதார மந்திரியாக இருக்கும்போது ஆஸ்பத்திரிக்கு அடிக்கல் வைத்தீர்கள் அது என்ன நிலையில் இருக்கிறது என்றேன் அரசாங்கத்திடம் பணமில்லை என்றார் அரசியல் வாதிகள் இதைத்தான் சொல்லுவார்கள் என்றும் சொன்னேன்

நீதி: நீர் சுதந்திரக் கட்சி அபேட்சகராக இருந்தீரா?- இல்லை

நீதி இன்றைய கல்வி மந்திரியை யேட்டியிடும்படி கேட்டதாக நேற்று சொன்னீர்?- இல்லை.

காதா: கூட்டம் 4-30 மணிக்கு ஒழுங்கு செய்யப்பட்டது? - ஆம்.

காதர்: தாராக்குண்டில் உள்ளவர்கள் 4-30 மணிக்கு வைக்க அனுமதிக்கவில்லை? இல்லை.

காதர்: 2-ம் மனுதாரர் 6-30 மணிக்கு கூட்டம் வைக்க ஒழுங்குசெய்தாரர்? ஆம்.

காதர்: கூட்டத்தில் கேள்வி கேட்டீர் ஆம்

காதர்: நீர் ஒருவர்தான் கேள்விகேட்டீர்? இல்லை வேறு ஆட்களும் கேட்டனர்

காதர்: சேறு ஆட்களும் தாராக்குண்டில் கூட்டம் வைத்தார்களா?-ஆம்

காதர்: அந்தக் கூட்டத்தில் கேள்வி கேட்டீரா?- இல்லை.

காதர்: அப்படியானால் இந்தக் கூட்டத்தில் மட்டும் ஏன் கேள்விகேட்டீர்?- மந்திரி சொன்னதற்காககேள்வி கேட்டேன்.

காதர்: 2-ம் எதிர் மனுதார் போட்டிபோடுவதை விரும்பவில்லையா?- அப்படியில்லை.

காதர்: மற்றவர்களுக்கு டிக்கட் கொடுக்கும் நீங்கள் ஏன் போட்டியிடவில்லை என்று கேட்டீர்?- மன்னாரில் போட்டி போடும்படி தான் பதியுதீன் மகமத்தை கேட்கவில்லை

காதர்: பதியுதீன் மகமத்தான் தான் டிக்கட் கொடுப்பது என்றார்?- எனக்கு சனக் கூட்டத்தில் விளங்கவில்லை.

நீதியரசர்: ஏன் சத்தம் போட்டார்கள்?- ஆங்கிலத்தில் பதியுதீன் மகமத் கனக்கச் சொன்னார். எனக்கு விளங்கவில்லை,


நீதி: நீர் என்ன மொழியில் கேள்வி கேட்டீர்?- தமிழில் கேள்விகேட்டேன் அவர் தமிழிலும் பேசினார், நான் கேட்டதும் ஆங்கிலத்தில் சொன்னார்.

காதர்: பதில் எடுக்க கேட்டீர்?- அவர் சொன்னதற்காக பொதுவாக கேட்டேன்

காதர்: சும்மா கேள்வி கேட்டீர்?- அப்போது 2-ம் எதிர்மனதாரும் அங்குள்ளவர்களை கேள்விகேட்கச் சொன்னார்.

காதர்: கூட்டத்தை குழப்ப நீர்கேள்வி கேட்டீர்? -இல்லை.

காதர்:- கூட்டத்தில் கேள்விகேட்பது பதில் பெறுவதற்குத்தான் நீர் கூட்டம் குழப்பத்தான் கேள்வி கேட்டீர்?- நான் அப்படி கேட்க



### சங்கீதரத்தினம் பட்டம்பெற்றார்

ஊர்காவற்றுறை, சனி

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடத்தப்பட்ட சங்கீதப் பரீட்சையில் சரவணைக் கிராமத்தைச் சேர்ந்த செல்வி அமராவதி பசுபதிப்பிள்ளை 'சங்கீதரத்தினம் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

இராமநாதன் இசைக் கல்லூரியில் இசை பயின்ற இவர் திரு. ஐயாக்கண்ணு தேசிகர், சித்தூர் சுப்பிரமணியபிள்ளை ஆகியோரிடம் இசைபயின்றார்.

### உந்தர பிரதேச ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நீக்கிக்கொண்டதனால் பாரதீய கிராந்திதளம் தன் பெரும்பான்மைப் பலத்தை இழந்தது. இதனைத்தொடர்ந்து காங்கிரஸ் மந்திரிகளுக்கும் முதலமைச்சர் சரண் சிங்கிற்குமிடையே கருத்து மோதல்ஏற்படவே கவர்னர் கோபால ரெட்டி அட்டர்ணி ஜெனரலின் ஆலோசனை பெற்று ஜனாதிபதிக்கு சிபார்சு செய்ததன் பேரில் அங்கு ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப் பட்டது.

நீதி: எத்தனை கூட்டங்களுக்குப் போனீர்?- தராக்குண்டில் 2 கூட்டங்கள் நடந்தது.

நீதி: யாரை ஆதரித்து?- காதரை ஆதரித்த கூட்டம். அழகக்கோனை ஆதரித்தும் நடந்தது. 3 கூட்டம் நடந்தது

நீதி: 3 அபேட்சகரின் கூட்டமும் நடந்தது?- ஆம்,

நீதி: 3 கூட்டம் மட்டும் தான் போனீரா?- கடைசியாக மன்னாரிலும் கூட்டம் நடந்தது.

நீதி: யாரை ஆதரித்து?- 3 பேரையும் ஆதரித்து 3 கூட்டம் நடந்தது. காதர் கூட்டத்தில் ோய் நின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் திறமைக்கு சான்று வழங்கியது.

ஆனாலும் பிரச்னை ஓய்ந்து விடவில்லை. திறமையையும் தகுதியையும்விட வகுப்பு வாதக்கண்கொண்டு நோக்கும் மனப்பான்மை விட்டுப் போகவில்லை.

உயர்கல்விச் சட்டத்தின் படி பல்கலைக்கழகங்களில் உள்ள காலி இடங்கள் பற்றி தேசிய உயர்கல்விச்சபைக்குப் பல்கலைக்கழகங்கள் அறிவித்ததும் திறமையின் அடிப்படையில் எந்தெந்த மாணவர்களுக்கு எந்தெந்தப் பல்கலைக்கழகங்களில் எந்தெந்தப் பிரிவுக்கு யார் யார் அனுமதிக்கப்பட வேண்டுமென்பதை தேசிய உயர்கல்விச்சபை தீர்மானித்துத் தெரிவிக்கவேண்டும்.

உறுப்பினர்களின் இல்லங்களுக்கும் அலுவலகங்களுக்கும் அலைந்துதிரிகின்றனர்.

அறிவுக்கும் ஆற்றலுக்கும் தான் அரசாங்கம் மதிப்பளிக்கும் என்று அமைச்சர்கள் அடிக்கடி கூறிவருகின்றனர். அறிவுக்கும் ஆற்றலுக்கும்தான் இடமளிப்பதாயின் பல்கலைக்கழகப் பிரவேசத்திலும் பட்டதாரி ஆசிரியநியமனங்களிலும் அநாவசியமான தாமதம் ஏன்?

தாமதம்செய்வது வீண் சந்தேகங்களுக்கே இடமளிக்கும்.

எதைச் செய்வதானாலும் தாமதமின்றி ஒரு முடிவை விரைவாகச் செய்தால் அதிருப்தி வளர இடமிருக்காது கல்வி அமைச்சர் இதை கவனத்தில் கொள்வது அவசியம்.

# அமைச்சர் பீலிக்ஸ் வடபகுதி வருவார்

## கிளிநொச்சியில் மின் விநியோகத்தை ஆரம்பித்து வைப்பார்

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சிப் பகுதிககு வெகுவிரைவில் லக்ஸபான மின்சாரம் விநியோகிக்கப் படவுள்ளதாக உள்ளூராட்சி மன்ற உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பெரும்பாலும் மார்கழிமாத நடுப்பகுதியில் லக்ஸபான மின்சாரத்திட்டத்திலிருந்து மின்சார விநியோகம் நடைபெறவுள்ளது. தற்பொழுது பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்திலிருந்து கிளிநொச்சிப் பகுதிக்கு மின்சார விநியோகம் நடைபெறுவது தெரிந்ததே.

புதிய மின்சார விநியோகத்திட்டத்தின் மூலம் இப்பகுதியிலுள்ள அனைவருக்கும் மின்சாரம்கிடைக்கும் துரிதமாக நடைபெற்று வரும் மின்சாரத்திட்டவேலைகள் அடுத்தமாதக்கடைசியில் பூர்த்தியடையும் என அந்த அதிகாரி தெரிவித்தார்.

மின்சார விநியோகம் ஆரம்ப விழாவில் உள்ளூராட்சி நிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பிரதம விருந்தினராகக் கலந்து மின்விநியோகத்தை ஆரம்பித்து வைப்பார் எனத்தெரிகிறது.

— —

## முன்மாதிரி

உடுப்பிட்டி, சனி

'வடமராட்சிப் பகுதி உருளைக்கிழங்குச் செய்கையில் சென்ற காலங்களில் முன்மாதிரியாக விளங்கியது. மூன்றிலொரு பங்கு உருளைக்கிழங்கை இப்பகுதி விவசாயிகள் பயிரிட்டு வருவது குறிப்பிடத்தக்கது. உருளைக்கிழங்குச் செய்கை இப்பகுதியில் மேலும் அபிவிருத்தியடையவேண்டும்'

இவ்வாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் வடமராட்சி தெற்கு, மேற்கு காரியாதிகாரி கந்தோரில் நடைபெற்ற உணவுற்பத்தி ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில் அப் பகுதி விவசாயிகளை பாராட்டிக் கூறினர்.

விவசாய அபிவிருத்தி சம்பந்தமாகவும் கூட்டுறவு புனரமைப்புச் சம்பந்தமாகவும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

## இசைவிழா

புலோலி, சனி

அடுத்த மாதம் 5-ம், 6-ம் திகதிகளில் வதிரி தேவனரயாளி இந்துக் கல்லூரியில் சங்கீத விழா ஒன்று நடைபெறவிருக்கின்றது. வதிரி தேவனரயாளி இளைஞர்களால் நடாத்தப்படும் இந்த விழாவில் யாழ். குடாநாட்டைச் சேர்ந்த பல சங்கீத வித்துவான்களும் கலந்து கொள்வர்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மேற்கூறிய தகவல்கள் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

.................. ..........................................

திகதி போட்டியாளரின் கையொப்பம்

# ரயிலுக்குள் மூர்க்கத்தனமாக புகுந்து வாலிபர் அட்டகாசம்

## வவனியாவில் சம்பவம்

யாழ்ப்பாணம், சனி

வவனியா ரயில் நிலையத்தில் நின்றுகொண்டிருந்த ரயிலுக்குள் புகுந்து அட்டகாசம் செய்து ரயிலுக்கு கற்கள் வீசிய சுமார் 15 பேர்கொண்ட கோஷ்டி ஒன்றைக் கண்டுபிடிப்பதில் வவனியாப் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்

நேற்று அதிகாலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்துகொண்டிருந்த தபால் ரயில் வவனியா ரயில் நிலையத்தில் வந்து நின்றபோது இந்த வாலிபர் கோஷ்டி ரயிலினுள் புகுந்து அங்கும் இங்கும் ஓடித்திரிந்து ரயிலில் உறங்கிக் கொண்டிருந்த பிரயாணிகளை காலினல் மிதித்து உழக்கியதாகவும் கூறப்படுகின்றது

நேற்று அதிகாலை சுமார் 2 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது ரயில் நிலையத்தில் ரயில் நின்றபோது பெரும் அட்டகாசம் செய்த இந்தக் கோஷ்டி, ரயில் புறப்படும்போது கற்களால் வீசினர். பிரயாணிகள் அல்லோல கல்லோலப்பட்டு, அபாய மணியை இழுத்து ரயிலை நிறுத்தினர்.

வவனியாவிலுள்ள ஒரு சினிமாத் தியேட்டர் ஒன்றில் மனேஜராகக் கடமையாற்றும் ஒருவர் சினிமாத் தியேட்டரில் நடந்த கைகலப்பின் போது ஒருவரைத் தாக்கியதாகவும், அதைத் தொடர்ந்து மனேஜர் யாழ்ப்பாணம் வருவதற்காக ரயிலில் வந்து ஏறியதாகவும், அவரைத் தொடர்ந்து வந்த இந்தக் கோஷ்டி ரயில் நிலையத்தில் புகுந்து குறிப்பிட்ட நபரைத் தாக்க முயன்றதாகவும், பின்னர் ரயிலுக்கு கற்கள் வீசப்பட்டதாகவும் இதன் பின்னர் அபாய சங்கிலியை சம்பந்தப்பட்டவர் இழுத்ததாகவும் விசாரணையில் தெரியவந்தது. ரயிலை நிறுத்தக் காரணமாக இருந்தவர் அதிகாரிகளினல் விசாரணைக்குட்படுத்தப் பட்டார்.

இவ்வாலிபர்கள் கையில் இரும்புச் சங்கிலிகளுடன் ரயிலில் மூர்க்கத்தனமாக அங்கும் இங்கும் ஓடித்திரிவதை கண்டு அச்சம் கொண்ட பெண்களும், குழந்தைகளும் ஆசனங்களின் அடியில் பதுங்கிக் கொண்டதாகவும், மலசலகூடத்தினுள் ஒழிந்து கொண்டிருந்த ஒருவரை பலவந்தமாக வெளியே இழுத்ததாகவும் பிரயாணிகள் கூறினர்கள்.

வவனியா பொலிசார் இது சம்பந்தமாக விசாரணையில் ஈடுபட்டு, சம்பந்தப்பட்டவர்களைத்தேடிவருகின்றனர்.

# வேலணைச் செய்திகள்

— நமது நிருபர் க. அம்பிகாபதி —

வேலணை, சனி

இன்றைய அரசியல் நிலையை மக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு மாதமும் அரசியல் வகுப்பு நடத்துவதெனவும் ஆட்சிமன்ற உறுப்பினர்களையும் அரசியல் அறிஞர்களையும் அழைத்து வகுப்பை நடத்தச் செய்வதெனவும் முதியோர் கல்வி வகுப்பு நடத்துவதெனவும் இவற்றை ஊர்காவற்றுறை ஆட்சிமன்ற உறுப்பினருடன் தொடர்பு கொண்டு செயல்படுத்துவதெனவும் வேலணை கிராம சீர்திருத்தச்சங்க மாதாந்தக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

உபதலைவர் திரு. வ. குமாரசாமி தலைமையில் வேலணை கிழக்கு வைரவர் ஆலய மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது.

வேலணை வங்களாவடியிலிருந்து சாட்டியூடாக மண்கும்பான்வரை செல்லும் வீதியைத் திருத்தி போக்குவரத்துக் கஷ்டத்தைப் போக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோருவதென்றும் வேலணை முதலாம் வட்டார மக்களின் போக்குவரத்து வசதிக்காக பல வருடங்களுக்கு முன் ஆங்காங்கே மக்கி கொட்டி அமைக்கப்பட்ட வீதி தொடர்ந்து திருத்த படாமல் மாரிகாலங்களில் போக்குவரத்துக்குக் கஷ்டமாயுள்ளதால் இதுவரை வீதிக்குக் காணி விட்டுக்கொடுக்காதவர்களுடன் தொடர்பு கொண்டு வீதிக்குக் காணியைப் பெறுவதுடன், இவ்வீதியைத் திருத்தித்தருமாறு வேலணை கி. ச தலைவரைக் கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

### பதில் காரியாதிகாரி

தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. சொ. விநாயகலிங்கம் இரண்டுமாத பயிற்சிபெறும் பொருட்டு கொழும்பு செயலகம் சென்றுள்ளார் இவரது இடத்திற்கு திரு. நடராசா இம்மாதம்தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்,

### இடமாற்றத்திற்கு ஆட்சேபம்

நாரந்தனைக் கிராமசேவையாளர் திரு. இடமாற்ற உத்தரவு மூலம் பருத்தித்துறைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவரது இடமாற்றத்தை நிறுத்துமாறு இப்பகுதிமக்கள் ஊர்காவற்றுறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு கா. பொ. இரத்தினத்திடம் கேட்டுக்கொண்டதையடுத்து உள்நாட்டு அமைச்சருடன் எம். பி. தொடர்பு கொண்டுள்ளார்.

### கூட்டுப்பிரார்த்தனை

வேலணை அரசடி வைரவர் ஆலயத்தில்வெள்ளிக்கிழமை தோறும்கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்று வருகிறது. வேலணை கிராம சீர்திருத்தச் சங்கம் இதனை நடத்தி வருகிறது.

0 0 0

வேலணைப்பகுதியில்தொடர்ந்து பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தாமல் வருடக்கணக்காகத் தரவையாக விடப்பட்டிருக்கும் காணிச் சொந்தக்காரர்கள் நெல் உற்பத்தியில் பின்னிற்பது குறித்து இப்பகுதிப் பயிர்ச் செய்கைக்குழுக்காரியதரிசி கவலை தெரிவித்தார்.

விதைநெல் இல்லாமல் கஷ்டப்படும் விவசாயிகள் பயிர்ச்செய்கைக்குழுவுடன் தொடர்பு கொண்டு தரமான நல்லரக நெல்லைப் பெற்றுக் கொள்ளலாமென்றும், கட்டாக்காலிகள் விஷயத்தில் பயிர்ச்செய்கைக் குழுகவனமெடுக்குமென்றும் அவர் கூறினர்.

சொன்னேன்

நீதி: நீர் சுதந்திரக் கட்சி அபேட்சகராக இருந்தீரா?- இல்லை

நீதி இன்றைய கல்வி மந்திரியை வேட்டியிடும்படி கேட்டதாக நேற்று சொன்னீர்?-ஆம் அப்படியும் கேட்டேன்

நீதி: எதற்காக அப்படி கேட்டீர்?-கேள்வியையாரும் கேட்கலாம் என்றுசொன்னார்கள் அதனல்கேட்டேன்

நீதி: மன்னார் தொகுதியில் போட்டியிடலாம் என்று கேட்ட அர்த்தமென்ன? அவரை ஒரு தொகுதியில் போட்டியிட்டால் என்ன? என்றேன்.

நீதி: தேர்தலைப்பற்றி நீர் அக்கறைப்படவில்லை? இல்லை.

நீதி: சத்தியக் கடதாசி விபரம் யார் சொன்னது? நான் புறக்டருக்கு சொன்னேன். அவர் அவற்றை எழுதினர். பின் அச்சடித்த கடதாசியை தந்தார் நேரத்தைப் புறக்டர் போடச் சொன்னர்.

நீதி: கையெழுத்துப்போடு முன் உமக்கு பத்திரம் வாசிக்கப்பட்டதா? ஆம்.

நீதி: நீர் சொன்ன பிரகாரம் இருந்ததா?

மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் குரொசட் தம்பையா சாட்சியை மறுவிசாரணை செய்தார்.

வழ: எவ்வளவுகாலமாக ஹபிர் புறக்டராக இருந்தார்.? 20 வருடம்,

வழ: அவர் ஒரு காதியாக நியமிக்கப்பட்டிருந்தாரா? ஆம்,

மன்னாரில் கடந்த தேர்தலில் சுதந்திரக்கட்சிசார்பில் போட்டியிட்ட வரும் 2வது எதிர்மனுகாரருமான என். எஸ். கே. காதர் சாட்சியைக் குறுக்குவிசாரணைசெய்தார்.

காதர்: 2-ம் எதிர்மனுதார் கூட்டம் வைத்தது தெரியுமா? - ஆம்.

காதர்: 2-ம் எதிர்மனுதார் இனத்தவரா? ஆம்.

என்ன விதத்தில்? தாய்வழியில்

காதர், 26-ம் தேதி பதியூதீன் மகமதுடன் கூட்டத்திற்கு வந்தார்? - ஞாபக

குழப்ப நீர்கேள்வி கேட்டீர்? -இல்லை.

காதர்:- கூட்டத்தில் கேள்விகேட்பது பதில் பெறுவதற்குத்தான் நீர் கூட்டம் குழப்பத்தான் கேள்வி கேட்டீர்?- நான் அப்படி கேட்கவில்லை.

இக்கட்டத்தில்மனுதாரின் அட்வகேட் குரசொட் தம்பையா மறுவிசாரணை செய்தார்.

வழ: தொழுகைக்குபின் கதீஸ் பிரசங்கம் நடக்கும்? ஆம்,

வழ: கதீஸ் என்றால்?- மார்க்கப்பிரசங்கம்.

வழ: தேர்தலில் வாக்களித்ததாக கூறினீர்?- ஆம்

வழ: இத்தேர்தலில் 3 அபேட்சகர்கள் போட்டியிட்டனர்?-ஆம்

வழ: நியமனத்திற்கு பின் எவருக்கு வாக்களிப்பது என்று தீர்மானித்திரா?-ஆம்

வழ: நியமனத்திற்கு எத்தனை நாளுக்கு பின் தீர்மானித்தீர்?- 2 கிழமையின் பின்.

மனுதார் ரஹீமை தெரியும்?- ஆம்

வழ; உமக்கும் அவருக்குமிடையில் உறவு எப்படி?- அன்பாக இருந்தது.

வழ; தேர்தல் கூட்டங்களுக்கு நீரும் போயிருக்கிறீர்?- ஆம்

வழ: முன்பு நடந்த தேர்தல் கூட்டங்களுக்கும் சென்றிருக்கிறீர்?-ஆம்

வழ: அபேட்சகர்கள் தாக்கிப் பேசப்பட்டார்களா?- கூட்டங்களில் கவனிக்கவில்லை,

வழ: 2-ம் எதிர் மனுதாரை ஆதரித்து நடந்த கூட்டத்திற்கு போனீர்? ஆம்

வழ: டாக்டர் பதியூதின் முகமத் அக் கூட்டத்தில் பேசினாரா?-ஆம்

வழ: யூ என் பியைப் பற்றி ஏதாவது சொன்னரா?-யூ என் பியை தாக்கிப் பேசினர்.

வழ: ரஹிமைப் பற்றிச் சொன்னரா?- ஆம்.

வழ: என்ன சொன்னர்?- மாவட்டசபை பற்றி பட்டணசபையில் வரும்போது ரஹிம் ஆதரித்தார் சிறுபான்மை மக்களுக்கும் பொதுவாக முஸ்லிம்களுக்கும் ரஹீம் துரோகி என்று கூறினர்,

வழ: அக்கூட்டத்தில் வேறு யாரும் பேசினர்களா?- காதரும் கூட்டத்தில் இருந்தார். பதியூதீன் பேசியதும் நான் பள்ளிக்குப் போய்விட்டேன்.

வழ: வேறு கூட்டங்களில் அபேட்சகரைப் பற்றிப் பேசியதைக் கேட்டீரா?- தாக்கிப் பேசியதை கேட்டதில்லை

யாக மன்னாரிலும் கூட்டம் நடந்தது.

நீதி: யாரை ஆதரித்து?- 3 பேரையும் ஆதரித்து 3 கூட்டம் நடந்தது. காதர் கூட்டத்தில் போய் நின்றேன். மழை வந்தது நிற்க இடமில்லை நான் வீட்டிற்குப் போய்விட்டேன். 10 மணிக்குப் பிறகு பஸ்ஸும் இல்லை, நான் போய்விட்டேன்

நீதி: ரஹீமின் கூட்டத்திற்குப் போகவில்லையா?- மழை வந்ததால் வீட்டிற்குப் போனேன்.

வழ: நீர் கொடுத்த நோட்டீசில் எந்த வசனம் உமக்கு வருத்தத்தைக் கொடுத்தது?- சுரண்டித் தின்னும் என்ற வார்த்தை.

வழ: அந்த வசனத்தை வாசியும்?- சுரண்டித்தின்னும் பேர்வழி.

நீதி: வசனம் என்றால் என்ன என்று தெரியுமா? ஆம்.

நீதி: எழுவாய் பயனிலை தெரியும் தானே?- ஆம்,

நீதி: சுரண்டித் தின்னும் என்ற வசனத்தைக் கூறும்?- மக்களுக்காக தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்பவரே பாராளுமன்றத்துக்குத் தகுந்தவரே தவிர மக்களிடம் சுரண்டித் தின்னும் பேர்வழியல்ல. சுயநலவதி பொதுநலவிரோதி,

நீதி: இந்தச் சொல்லுகள் யாரை குறித்து எழுதப்பட்டது எனக் கருதுகிறீர்?- மன்னார் பட்டணசபைத் தலைவரைப் பற்றி

நீதி: நீர் அதை எப்படி கருதினீர்?- பட்டணசபைத் தலைவர் மக்களிடம் லஞ்சம் வாங்கி பலாதிகாரமாக வற்புறுத்தி சனங்களிடம் வாங்கினர் என்று.

### மௌலவி சாட்சியம்

இரண்டாவது சாட்சியாக மகமட் இஸ்மாயில் அப்துல்மஜீத் மௌலாவி நேற்று சாட்சியமளித்தார். விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

## விற்பனைக்கு

H. A. 2 மாதிரி 3 நிலையுடைய 400ல் இருந்து 230 V-10 கிலோவாட்டுடன் கூடிய 19 கோஸ்பவர் உடைய இரண்டு வருடம் பாவிக்கப்பட்ட லிஸ்டர் ஜெனறேற்ற டீசல் எஞ்சின் சிறந்த நிலையில் விற்பனைக்குண்டு. 24-10-70க்கு முன்பாக அதிகப்படியான விலைக்குக் கோருவோருக்குக் கொடுக்கப்படும். வேலை நேரத்தில் எஞ்சினைப் பார்வையிடலாம். இலங்கை நோர்வே அபிவிருத்தி நிலையம், காரைநகர். 2348

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org